விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

உங்கள் 'தமிழ் நாதம்' நாளை விசேட ஒலிம்பிக் கட்டுரைகள், செய்திகளுடன் வெளியாகும்

இராகம் 01 | தாளம் 27 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 11 வியாழக்கிழமை (26.07.2012) | பக்கங்கள்: பதினாறு



இந்தியாவின் 13ஆவது குடியரசுத் தலைவராக பிரணாப் முகர்ஜி நேற்றைய தினம் பதவியேற்றுக் கொண்டார். முன்னதாக காந்தியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினார். இதேவேளை ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள முகர்ஜிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

## குருநாகல் மக்குலுவெவ பள்ளிவாசலில் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி

குருநாகல் வெவ்லவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இக்குறுவத்தை கிராமத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலொன்று சிலரால் பலாத்காரமாக மூடப்பட்டு தொழுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை குருணாகல் மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அப்துல் சத்தார் நேற்று முழுமையாக நிராகரித்தார். சில தரப்பினர் இடையூறு செய்ய முற்பட்ட போதும் பொலிஸாரின் தலையீட்டுடன் அந்த முயற்சி தடுக்கப்பட்டதோடு மத அனுஷ்டானங்கள் வழமைபோல இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க.வுடன் தொடர்புடைய சிலரே இவ்வாறு தேவையற்ற பிரச்சினைகளை தூண்டி பொய் வதந்திகளை பரப்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை பள்ளிவாசலுக்கு அருகில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. ஐ.தே.க. முக்கியஸ்தர்களில் ஒருவரான பிக்கு ஒருவரின் தலைமையில் வந்த சிலர் அங்கு குழப்பம் ஏற்படுத்த முயன்றதாக அறிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தியுள்ளார்.

மேற்படி பள்ளிவாசல் 1994 முதல் இங்கு இயங்கி வருவதோடு முஸ்லிம் கலாசார திணைக்களத்திலும் இப்பள்ளி 02

# யாழ்.நீதிவானைப் பிரதிவாதியாக குறிப்பிட முடியுமா?

**'உதயன்' பத்திரிகையின் மேன் முறையீட்டு மனு குறித்து சட்டத்தரணிகள் கேள்வி**

யாழ்.நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவை சட்ட ஒழுங்கற்ற முறையில் உதயன் பத்திரிகை பிரதிவாதியாகக் குறிப்பிட்டதாகப் பல சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பாக யாழ்ப்பாண நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைக் கேள்விக்குட்படுத்தி உதயன் பத்திரிகை மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றினைத் தாக்கல் செய்திருந்தது.

நீதிவான் ஒருவரின் முடிவுகள் தொடர்பாகச் செய்யப்படும் மேன்முறையீடுகளில் சட்ட மா அதிபரையே பிரதிவாதியாகக் குறிப்பிடுவது வழக்கம். நீதிபதியொருவரைப் பிரதிவாதியாகக் குறிப்பிட முடியாது. இந்த நிலையில் உதயன் பத்திரிகை தாக்கல் செய்த மேன்முறையீட்டு வழக்கில் யாழ்.நீதிவானைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டது ஏன்? என்று யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

நீதிபதியொருவரை எவராலும் கேள்விக்கு உட்படுத்தப்படாத நிலையில் 'உதயன்' பத்திரிகை யாழ்.நீதிவானை திட்டமிட்டுத் தொடர்ந்து அவமதிப்புக்குள்ளாக்கும் நோக்கில் செயல்படுகிறதா? என்றும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. யாழ்.நீதிவானை அவமதிக்கும் நோக்கில் தொடர்ந்தும் செய்திகளைத் திட்டமிட்டு வெளியிடுகிறதா? என்றும் சட்டத்துறை வட்டாரங்கள் கேள்வி எழுப்புகின்றன.

யாழ் நீதிமன்ற நீதிவானுக்கு அறிவித்தலோ, அழைப்புக் கட்டளையோ இதுவரை 02

## இஸட் (Z) புள்ளி: அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி

2011 க.பொ.த உ/த பரீட்சைக்கான இஸட் புள்ளி வெளியிட்டமை தொடர்பில் உடனடியாக அறிக்கை ஒன்றை சமர்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்கவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

2011 க.பொ.த உ/த பரீட்சை இசெட் புள்ளி பொது சூத்திரத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டதால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். 02

## பெண் தொழில் அதிபர் விடுதியிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியாவில் விடுதி ஒன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை தொழிலதிபரான கேதாரலிங்கம் விசாகினி (வயது31) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரிஷாத் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

அமைச்சர் றிஷாட் பதியுதீன், நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக தண்டிக்கப்பட வேண்டுமென மேல் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கும் மனுவொன்றை மன்னார் சட்ட சங்கம், காலி சட்ட சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட சிரேஸ்ட சட்டத்தரணிகள் நேற்றுப் புதன்கிழமை தாக்கல் செய்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன், இம்மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார். 02

**சட்டவிரோத அவுஸ்ரேலிய பயணம்:**

## சதிகாரர்களின் வலையில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என பொலிஸ் எச்சரிக்கை

**புகலிடம் கோரிய யாழ்.வாசியை நாடு கடத்தியது அவுஸ்திரேலியா**

புகலிடம் கோரி அவுஸ்திரேலியா சென்று அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களத்தால் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்ட இலங்கையர் 02

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 620 பேர் கடந்த ஏழு மாத காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 40பேர் ஆட்கடத்தலில் ஈடுபட்ட முகவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் 02

## திருமலையில் கூட்டமைப்பு வேட்பாளர் கைது

ஆட்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதி ஒருவர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத், தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் 24ஆம் 02

## வட மாகாண ஆசிரியர் இடமாற்றம்: செப்டெம்பருக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

வடமாகாணப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென்று நிர்வாகத்துக்குப் பொறுப்பான மேலதிக கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார் இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வரும்.

இடமாற்ற விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் ஊடாக உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். 02

## தேசிய விளையாட்டு அணியில் முன்னாள் புலிகள் எட்டுப் பேர்

புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் புலி உறுப்பினர்கள் எட்டு பேர் இலங்கையின் தேசிய விளையாட்டு அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது.

குறிப்பாக்த்து கடும் போட்டிக்காக கனகசுந்தரம் ரஜீவன், தயாபரன் காவேந்திரன், செல்வ முத்து சுரேஷ்குமார், பத்மராஜன் தர்ப்பன், கோபால் கிருஷ்ணன், பிரேம குமார் ஆகிய ஐவரும் 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# மன்னார் நீதிமன்று முன் ஆர்ப்பாட்டம்

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக உப்புக்குளத்தைச் சேர்ந்தவர்கள் நேற்றுக் காலை ஒன்பதரை மணியிலிருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நீதிவானுக்கும் நீதிமன்றத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய இவர் களைக் கலைப்பதற்குக் கலகம் அடக்கும் பொலிசார் ஸ்தலத் துக்கு விரைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்கு முழங்காலுக்குக் கீழ் சுடுமாறு பிரமுகர் ஒருவர் பொலிசாரைக் கேட்டுக் கொண்டாராம். இதே வேளை மன்னார் மாஜிஸ்திரேட் ஜூட்சனுக்கு நேற்றும் தொலைபேசி மூலம் மிரட்டல் விதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நண்பகல் அளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சம்பவ இடத்திலிருந்து கலைக்கப்பட்டனர்.

# பிரணாப் முகர்ஜிக்கு ஆனந்தசங்கரி வாழ்த்து

இந்திய ஜனாதிபதியாக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமைக்காக தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பிலும் எனது பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி. ஆனந்தசங்கரி இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு தெரிவித்துள்ளார்.

தாங்கள் நிதி அமைச்சராகவும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சராகவும் பணியாற்றிய காலத்தில் எமது இனப்பிரச்சனைக்கு ஓர் தீர்வு ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போதெல்லாம் விசுவாசமாக உழைத்தீர்கள் என்பதை நாம் அறிவோம். தற்போது ஆண்டவனாலேயே நல்லதோர் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதி பதி அவர்களுடன் தங்களுக் குள்ள நல்லுறவுடன் இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாக தங்களுக்குள்ள பரிபூரண அறிவையும் இந்திய மக்களால் நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள பெருமைமிக்க பெரும் பதவியும் சேர்ந்து இலங்கை பிரச்சினையை விரைவாக தீர்க்க கூடிய நடவடிக்கையை எடுக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் ஆனந்தசங்கரி தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். முனியப்பர் வீதி நடைபாதை கடைகளில் தீ!

யாழ். முனியப்பர் கோவில் வீதியிலுள்ள, நடைபாதை வியாபாரக் கடைகளில் ஏற்பட்ட தீ விபத்தால் பல இலட்சம் பெறுமதியான உடுபுடவைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று புதன்கிழமைகாலை 6.45 மணியளவில் திடீரென கடைகளில் தீ, பற்றி எரியத் தொடங்கியுள்ளது.

இதனை அவதானித்த இந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக யாழ். மாநகர சபை தீயணைப்புப் பகுதியினருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு உத்தியோகத்தர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்தில்ஒரு கடையில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளும், மற்றக் கடையில் 10 இலட்சம் பெறுமதியான உடுபுடவைகளும் எரிந்து நாசமாகியுள்ளன. மற்றொரு கடையில் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில், மின்சாரம் தடைப்பட்டதால், மின் விளக்கை அணைக்க மறந்து அவசரத்தில் கடையை மூடி விட்டுசென்றதாக குறிப்பிட்ட, எரிந்தகடை ஒன்றின் உரிமையாளர் தொரிவித்தார்.

உடுபுடைவைகள் ஏதேனும் மின் விளக்கில் முட்டுப்பட்டதால் ஏற்பட்ட விபத்தா அல்லது மின் ஒழுக்கால் ஏற்பட்ட விபத்தா என தம்மால் கூறமுடியாது உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## தேசிய விளையாட்டு...(தொடர்)

தெரிவாகியுள்ளனர்.

இதேபோன்று கிரிக்கட்டிற்காக சிவகுமாரன் துஷியந்தன், எஸ். நவதீபன் ஆகியோரும் கராட்டேக்காக எஸ். திருபாகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## புகலிடம் கோரிய..(தொடர்)

ஒருவர் நேற்று 25ம் திகதி புதன்கிழமை நாடு கடத்தப்பட்டார்.

இவரை நாடு கடத்தலில் இருந்து தடுப்பதற்கான முயற்சிகளை சட்டத்தரணிகள் மேற்கொண்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதன்படி குறித்த இலங்கையர் அவுஸ்திரேலிய நேரப்படி இன்று மாலை 2.35 மணியளவில் பாங்கொக்கு அனுப்பப்பட்ட இவர் அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த இலங்கையர் 2010ம் ஆண்டு புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்குச் சென்றவராவார்.

இவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் கொலை செய்யப்பட்டு விடுவார் என நாடு கடத்தப்படும் நபரின் சகோதரி கண்ணீருடன் கூறியுள்ளார்.

நாம் நாட்டில் தங்கியிருப்பதில் என்ன பிரச்சினை இருக்கிறது? தயவு செய்து அவனை என்னிடம் கொடுத்துவிடுங்கள் நான் பார்த்

# பெற்ற குழந்தையை வீசினாராம்: கோப்பாய் பெண் கைது

கைலகொட என்ற இடத்திலுள்ள விருந்தினர் விடுதியொன்றுக்கு வெளியே இறந்த நிலையில் சிசுவொன்று கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து கோப்பாயைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். கைலகொட என்ற இடம் பதுளை - மகியங்களை வீதியில் உள்ளது. இந்த மூன்று நாள் சிசுவின் தாய் என்ற சந் தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 23 வயதாகும்.

நேற்று முன்தினம் இந்த இளம்பெண் கைது செய்யப்பட்டார்.

கோப்பாயிலிருந்து தன்னந் தனியனாக கைலகொடவுக்கு வந்த இந்தப் பெண் மேற்குறிப்பிட்ட விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார். பிரசவித்த குழந்தையை ஜன்னல் ஊடாக வெளியே வீசிவிட்டாராம்.

# 12 சிறுமியர் துஷ்பிரயோகம்: பாதுகாவலர் கைது

### சந்தேக நபருக்கு விளக்கமறியல்

மாவனெல்லை பிரதேசத்திலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றைச் சேர்ந்த 5 சிறுமிகள் மற்றும் எஹலியகொட பிரதேச சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 7 சிறுமிகள் உட்பட 12 சிறுமிகளை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதாக கூறப்படும் சிறுவர் இல்ல பாதுகாவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபரின் நடவடிக்கைக்கு துணை போனதாகக் கூறப்படும் பெண் ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் இருவரும் இன்று மாவனெல்லை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை விளக்கமறியளில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## சதிகாரர்களின் வலையில்..(தொடர்)

பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விடுவிட்பாளர்கள் என்ற போர்வையில் மனிதக் கடத்தலில் ஈடுபடும் நபர்களின் சதிகளுக்குள் பொதுமக்களை சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த படகுகளை கடந்த 11 மற்றும் 20ஆம் திகதிகளில் கடற்படையினர் கைப்பற்றியதுடன் அவற்றில் பயணித்த 138பேரையும் கைது செய்தனர்.

இந்நிலையில், இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததாகக் குறிப்பிடப்படும் சந்தேகநபர்கள் மூவரை நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்தனர்.

அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைப்பதற்காக மேற்படி 138 பேரிடமிருந்தும் தலா இரண்டு இலட்சம் முதல் 12 இலட்சம் ரூபா வரை மேற்படி சந்தேகநபர்கள் வசூலித்துள்ளார்கள் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

வெள்ளத்தம்பி சுரேஸ்குமார் (வயது 38), வெள்ளத்தம்பி சுதாகரன் (வயது 39) மற்றும் தண்டாயுதபாணி கரிகாலன் (வயது 39) ஆகிய மூவரமே நேற்று இரவு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அரசில்வாதியாகச் செயற்படும் அதேவேளை புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புடையவர் என்றும் மனிதக் கடத்தல் மூலம் இவர் சுமார் இரண்டரை கோடி ரூபாவினை வசூலித் துள்ளார் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

## திருமலை..(தொடர்)

திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.30 அளவில் திருகோணமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சுரேஸ்குமார் என்ற நபரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவருடன் மேலும் இருவர் ஆட்கடத்தல் குற்

## வடமாகாண ஆசிரியர்...(தொடர்)

விண்ணப்பத்துடன் முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இடமாற்றத்தினை சான்றுப்படுத்தக் கூடிய ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாகாணக் கல்வித் திணைக்களம், வலயங்களுக்கு வழங்கியுள்ள விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாகவுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

## குருநாகல் மக்குலுவெவ...(தொடர்)

வாசல் பதியப்பட்டுள்ளதோடு இது தொடர்பான விபரங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டதாக ஸத்தார் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்ததும் குருணாகல் சுகா அமைப்பாளர் அப்துல் சத்தார், வடமேல் மாகாண சபை உறுப்பினர் ரிஸ்வி ஜவஹர்ஷா ஆகியோர் அங்கு விஜயம் செய்து பொலிஸாருடன் பேச்சு நடத்தினர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் இதற்கு முன்னர் சிங்காவத்தை பகுதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டது. இதன் பின்னணியில் குருநாகல் மாநகரசபை முன்னாள் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் காணப்பட்டார். இந்த சம்பவத்தின் பின்னணியிலும் ஐ.தே.க. முக்கியஸ்தர் ஒருவரே இருக்கிறார்.

அரசியல் லாபம் தேடும் நோக்குடனே இனங்களுக்கிடையில் வீணான பிரச்சினைகளை தோற்றுவிக்க இவர்கள் முயல்கின்றனர். இப்பள்ளிவாசல் பலவந்தமாக மூடப்பட்டதாக கொழும்பில் இருந்து ஐ.தே.க. மாநகர சபை உறுப்பினர் ஒருவர் அறிக்கை விட்டிருந்தார். ஆனால் இது முற்றிலும் பொய்யான செய்தியாகும் என்றார்.

ஏனைய இனத்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலே முஸ்லிம்கள் தமது மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர். ரமழான் மாதத்தில் ஏனைய நாட்களை விட மதஅனுஷ்டானங்களுக்கு அவர்கள் கூடுதல் நேரம் ஒதுக்குகின்றனர்.

இதே வேளை குறித்த பள்ளிவாசலுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்து தொழுகையில் மற்றும் மத அனுஷ்டானங்களில் தொடர்ந்து ஈடுபட எம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குழப்பம் ஏற்படுத்த முயன்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக பிரதேச உயர் பொலிஸ் அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாகவும் ஸத்தார் கூறினார்.

இது தொடர்பாக உலமா சபையின் உதவிப் பொதுச் செயலாளர் மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம் குறிப்பிடுகையில் குருநாகல்மக்குலுவெவ பள்ளிவாசல் சம்பவம் எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் அவ் விடயத்தை உடனடியாக பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு நாம் கொண்டு சென்றோம். நாம் கூறியவைகளை கேட்டறிந்த பொலிஸ்மா அதிபர் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்குலுவெவ பள்ளிவாசல் விவகாரத்தில் சுமூக நிலைமையை ஏற்படுத்தினார். சொற்ப நேரத்தில் பொலிஸ்மா அதிபர் எம்முடன் தொடர்பு கொண்டு வழமை போன்று சமய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக் கொண்டார். அவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத் தினோம். அச்சமயம் பாதுகாப்பு செயலாளர் முஸ்லிம்கள் ஏதாவது பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தால் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு ஆலோசனை வழங்கினார். அந்தடிப்படையில் இவ்விடயத்தை பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

இந்த வகையில் பாதுகாப்பு செயலாளருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்ளுகின்றோம் என்றார்.

## இஸட் புள்ளி அறிக்கை..(தொடர்)

அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் இஸட் புள்ளி மீண்டும் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்ற

## ரிஷாத் மீது நீதிமன்ற..(தொடர்)

நீதிமன்றத்தை அவமதித்தார் என அவருக்கு தண்டனை வழங்கக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் பணிக்க வேண்டுமென மனுவில் கோட்டுள்ளனர்.

அமைச்சரின் செயல்கள் நீதித்துறையினதும் நிதிமன்றங்களினதும் முறையான செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு என மனுதாரர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## யாழ்.நீதவானைப் பிரதி...(தொடர்)

வழங்கப்பட்டதாகவும் எவ்வித தகவலும் இல்லை என்றும் அப்பட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

'யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜாவுக்கும், நீதித்துறைக்கும் அபகீர்த்தியும், அச்சுறுத்தலும் ஏற்படுத்தும் விதத்தில் 'செய்தி வெளியிட்டார்' என்ற குற்றச்சாட்டு உதயன் பத்திரிகை ஆசிரியர் மீது முன்வைக்கப்பட்டுள்ளது.

'இந்த வழக்கு எதிர்வரும் மூன்றாம் திகதி யாழ் நீதிமன்றில் அழைக்கப்படவுள்ளது. யாழ் நீதிமன்ற நீதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் ஜூன் மாதம் 28ஆம் திகதி உதயன் பத்திரிகையில் செய்தி பிரசுரமாகியிருந்ததென்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நீதிமன்றில் ஆஜரான உதயன் பத்திரிகை ஆசிரியர் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## முருங்கை கன்றுகள் விநியோகம்

(சண்டிலிப்பாய்)

முருங்கைக் கன்றுகள் தேவைப் படுபவர்கள் கிராம அலுவலர்களு டன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வறிய மக்களிற்கு வழங்குவதற் கான ஒரு தொகை முருங்கைக் கன்று கிடைக்கப் பெற்று அவை கிராம அலுவலர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் தேவைப்படு வோர் தமது பகுதி கிராம அலுவ லர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். ஒரு கிராம அலுவலர் பிரிவிற்கு 35 குடும்பங்களுக்கே தலா 2 கன்று கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள்கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத் திருவிழாவோடு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது. சிவஸ்ரீ பி.கிருபாகரக்குருக்களால் கொடியேற்றப்படும் காட்சியையும் விநாயகப்பெருமான் மங்கள வாத்தியங்கள் முழங்க வீதியுலா வரும் காட்சியையும் காணலாம். (படம்: தெல்லிப்பளை நிருபர்)

# வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான 'ரட்ட விருவோ' அமைப்பு யாழில் அங்குரார்ப்பணம்

வெளிநாட்டில் தொழில் புரியும் மற்றும் தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பியுள்ள தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும் பங்களின் நலன்கள், பாதுகாப்பு, மற்றும் பொருளாதாரத்தை உயர்த் தும் நோக்கில் யாழ்.மாவட் டத்தில் "ரட்ட விருவோ" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் அங்குரார்ப் பண நிகழ்வு யாழ். மாவட்ட கேட் போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ் வில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலனோம்பல் துறை அமைச்சர் டிலான் பெரேரா, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டில் தொழில் புரிகின் றவர்களின் நலன்களைப் பேணு கின்ற வகையில் பல்வேறு திட் டங்கள் வகுக்கப்பட்டு அந்தத் திட்டங்கள் ஊடாக தொழில் புரி வோர் மற்றும் அவர்களின் குடும் பத்தினர் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்து அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே இந்த அமைப் பின் நோக்கமாகும்.

அத்துடன் தற்போது வெளி நாட்டு வேலைவாய்ப்பு ஊடாக நாட்டுக்கு 6000 மில்லியன் அந்நியச் செலாவணி ஈட்டப்படு கின்றது. இந்த அந்நியச் செலா வணியை 6500 மில்லியனாக உயர்தும் நோக்கிலும் இந்த அமைப்பு செயற்படவுள்ளது. இந்த அமைப்பு தொடர்பாக சமூக மட்டத்தில் ஆரம்பிப்பதற்காக முதற்கட்டமாக அந்த அமைப்பு பிரதேச செயலகம் ஊடாக செயற்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதன்போது அமைச்சர் டிலான் பெரேரா கூறுகையில்,

வெளிநாடுகளின் வாழ்கின்ற எம் மக்களினால் தான் இலங்கை யின் பொருளாதாரத்தை உச்ச நிலைக்கு கொண்டுசெல்ல முடி யும். வெளிநாடுகளில் தொழில்



புரியும் நம் நாட்டவர்கள் எதிர நோக்கிவரும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும், அவர்களது குடும்ப நலன்களைக் கருத்தில் கொண்டும் வெளிவள வீரர்கள் (ரட்ட விருவோ) என்ற அமைப்பு நாடளாவிய ரீதியில் பிரதேச மற்றும் மாவட்ட ரீதியாக அமைக்கப்பட்டு வருகின்றது என்றார்.

## கஞ்சா விற்ற மூவருக்கு அபராதம்

யாழ்.நகர் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 3 சந்தேக நபர்களுக்கும் யாழ்.நீதிவான் நீதி மன்றம் 30 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புல்லுக்குளம் பகுதியில் ஆட்டோ ஒன்றில் வைத்து கஞ்சா விற்ப னையில் ஈடுபட்ட மூவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப் பட்டனர். இவர்களை யாழ்.நீதி வான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

மேற்படி வழக்கினை விசார ணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா, சந்தேகநபர்கள் மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் செலுத் துமாறு உத்தரவிட்டார்.

# இவ்வருடம் 750 அகதிகள் இந்தியாவில் இருந்து நாடு திருப்பியுள்ளனர்

இலங்கையில் யுத்தம் மற்றும் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்த 750 பேர் இவ்வருடம் இலங்கைக்கு திரும்பியுள்ளதாக ஐ.நா. சபை யின் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மேலும் 100 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ள தாகவும் அவர்கள் ஒகஸ்ட் மாதம் அளவில் நாட்டுக்கு அனுப்பப்பட லாம் என்றும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

தமிழ்நாட்டு முகாம்களில் தங்கி யிருந்த 1,670 இலங்கை அக திகள் கடந்த 2011ஆம் ஆண்டு நாடு திரும்பியுள்ளனர்.

2010ஆம் ஆண்டில் 2,040 அக திகள் நாடு திரும்பியுள்ளதாக ஐ.நா. சபையின் அகதிகளுக் கான உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

நாடு திரும்ப விரும்பும் அக திகளுக்கு விமான செலவுகளும் இலங்கை விமான நிலையத்தில் இருந்து வீடு செல்ல 4000 ரூபா பணமும் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் உள்ள அகதிக- ளில் 68,000 பேர் அதாவது 36.73 வீதமானோர் இலங்கையர்களர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்த அமைச்சர்களின் பிள்ளைகளுக்கே தேர்தலில் போட்டியிட இடம்

சில அமைச்சர்களின் மனைவிமார் மற்றும் பிள்ளைகள் ஆகி யோருக்கு இம்முறை ஐ.ம.சு.மு.பட்டியலில் போட்டியிட இடமளிக்கப் படவில்லை. அரசியலில் இருந்து ஒதுங்குவதாக எழுத்து மூலம் அறிவித்த அமைச்சர் ஜகத் பாலசூரிய, பிரதியமைச்சர் எம்.கே. டபிள்யூ.எஸ்.குணவர்த்தன ஆகியோரின் பிள்ளைகளுக்கு மட்டுமே புதிதாக இடமளித்துள்ளதாக சு.க.செயலாளர் அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்தார்.

## இன்றைய இராசி பலன் (26.07.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 11ஆம் நாள் வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : சித்திரை காலை 8.55 வரை அதன் பின் சுவாதி
**திதி** : அட்டமி பின்னிரவு 12.16 வரை அதன் பின் நவமி
**சுபநேரம்** : 7.32 - 9.02
**இராகு காலம்** : 1.32 - 3.02
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : முயற்சி வெற்றி, பணவரவு, நண்பர் உதவி
**இடபம்** : வாக்கு விரோதம், மனக் குழப்பம், அயலவருடன் பிரச்சினை
**மிதுனம்** : மனமகிழ்ச்சி, நரம்பு ரோகம், பணப்புழக்கம் குறைவு
**கடகம்** : வயிற்று ரோகம், ஆத்திரமிகுதி, வீண் செலவு
**சிங்கம்** : வாகனசுகம், பொருள் வரவு, உஷ்ண ரோகம்
**கன்னி** : மனக்குழப்பம், மருத்துவச் செலவு, பிரயாணம்
**துலாம்** : ஓய்வு குறைவு, யோசனை மிகுதி, முன்னெச்சரிக்கை
**விருச்சிகம்** : வீண்பழி கேட்டல், கொடுக்கல் வாங்கல் சிக்கல், சகோதரரால் கவலை
**தனுசு** : இல்லச் சிறப்பு, பொருள் வரவு, புத்திரரால் மேன்மை
**மகரம்** : சுபகாரியச் செலவு, பிரயாணம், போசன சுகம்
**கும்பம்** : வீண்குறை கேட்டல், மனக்குழப்பம், பிறரால் தொல்லை
**மீனம்** : தெய்வ அனுகூலம், தொழில் உற்சாகம், வாகன சேர்க்கை

## நுரைச்சோலையில் கோளாறு கண்டுபிடிப்பு

புத்தளம் நுரைச்சோலை அனல் மின்உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறுக் கான காரணம் கண்டறியப்பட்டு அதனை திருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரி வித்துள்ளது.

ஆயிரக்கணக்கான கொதிகலன் ஊட்டு நீர் மின்சூடாக்கி குழாய்க ளில் 5-அங்குல ஒன்றில் ஏற்பட் டுள்ள முறிவே மின் உற்பத்தித் தடைக்கான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

இதனை சீர்செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக அமைச்சு அறிவித்துள்ளது.

## பழைய மாணவர்களால் யாழ்.இந்துவுக்கு நூல்கள்

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யில் 2005 உயர்தரப்பிரிவில் கல்வி கற்று தற்போது வெளி நாட்டிலும் உள்நாட்டிலும் வசி த்து வருகின்ற கல்லூரியின் பழைய மாணவர்களினால் கல் லூரி நூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

சுமார் 330000 ரூபா பெறுமதி யான இப்புத்தகங்கள்நூலகப் பாவனைக்கென அன்பளிப்பு செய் யப்பட்டுள்ளது.

இப்புத்தகங்கள் அண்மையில் நடைபெற்ற கல்லூரியின் வரு டாந்த பரிசளிப்பு விழா நிகழ்வில் வைத்து பழைய மாணவர்களால் கல்லூரி அதிபரிடம் வழங்கப் பட்டன.

இவ்வாறு பழைய மாணவர் களினால் அன்பளிப்பு செய்யப் பட்ட புத்தகங்களின் கண்காட்சி கல்லூரியின் நூலகத்திற்கு இரு தினங்கள் இடம்பெற்றது.

இக் கண்காட்சியை ஆசிரியர்க ளும், மாணவர்களும் ஆர்வத்து டன் பார்வையிட்டனர்.

இது குறித்து கருத்துத் தெரி வித்த பாடசாலையின் அதிபர், பழைய மாணவர்களின் நூல் அன்பளிப்பினையும் அவர்களது நல்லெண்ணத்தையும் பாராட்டிய தோடு இந்நூல்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி எதிர் காலத்திற்கு சிறந்த துணையாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# வட மாகாணத்தில் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை!

வட மாகாணத்தின் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், 22 மீன்பிடி படகுகள், மீன்பிடி உபகரணங்கள் உட்பட 15 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களிடையே அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. கடந்த வருடம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியின் காரணமாக வட மாகாண மீன் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் வட மாகாண மீனவர்கள் நாட்டின் 43 சதவீத மீன் உற்பத்தியினை மேற்கொண்டார்கள். இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீன்பிடித்துறையினை மேம்படுத்துவதற்காக 50 கோடி ரூபா நிதியினை செலவிட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உள்ள மீன்பிடித் துறைமுக பகுதிகளை ஆழமாக்குவதற்கான விசேட தொழில்நுட்பத்துடனான கப்பல் ஒன்றை நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன் வந்துள்ளது.



இந்த கப்பலின் பெறுமதி 125 கோடி ரூபாவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த பணிகளை மேற்கொண்டு வரும் ருகுணு புத்தா என்ற கடலை ஆழமாக்கும் கப்பல் கூட 23 வருடங் களுக்கு முன்னர் ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

# கச்சதீவு எமக்கு வேண்டும் என்கிறார் தா.பாண்டியன்

தமிழக மீனவர்கள் நலன் காக்க கச்சத்தீவை இந்தியா உடனே மீட்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள்.

எத்தனையோ தூதுக்குழுக்கள், அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை, அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவிட்டன. எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

பொழுதுபோக்கில் ஈடுபடுவதைப் போல, மீண்டும் படகுகள் கடத்தப்படுவதும், மீனவர்கள் கொல்லப்படுவதும் தொடர்கதையாகிவிட்டது.

மீனவர்கள் கொல்லப்படு வதை தடுப்பதற்கு ஒரே வழி கச்சத் தீவை மீண்டும் கைப்பற்றுவது தான் என்



பதை தமிழக சட்டமன் றம் ஏக மனதாக தீர்மானமாக இயற்றியுள்ளது.

எனவே, கச்சத்தீவை உடனடியாக மீட்க வேண்டும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது என அக் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளி விளையாட்டு விழா

சண்டிலிப்பாய்

சாவற்கட்டு முன்பள்ளியின் விளையாட்டு விழாவானது இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவற்கட்டு கடற்றொழிலாளர் சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி தலைவர் நா.பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறும் இவ் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன், கடல் தொழில் நீரியல் வளத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி மானிப்பாய் கியூ மெடிக்கா வெளிக்கள அலுவலர் என். நல்லசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# அமெரிக்கத் தூதுவருடன் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பெட்ரிசியா பியுட்னிஸ் மற்றும் நகர அபிவிருத்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை இச் சந்திப்பு இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான தூதுவர் பதவி காலம் முடிவுறவுள்ள நிலையில்,



பெட்ரிசியா பியுட்னிஸின் சேவையை பாராட்டி பாதுகாப்புச் செயலாளர் நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

# கலந்துரையாடல்

மயிலிட்டி மக்கள் மீள்குடியேற்றம் சம்பந்தமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் நாளை 27.07.2012ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி[illegible] வலிகாமம் வடக்கு பிரதேச ச[illegible]பையின் தலைமையலுவலகம் மல்லாகத்தில் நடைபெறவுள்ளது.

# புனர்வாழ்வு பெற்ற பெண்ணைக் காணவில்லை

வல்வெட்டித்துறை

சிதாம்பர வடக்கு, ஆதிகோயிலடியைச் சேர்ந்த அருமைத்துரை நளாயினியைக் (31வயது) காணவில்லை என தாயார் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த வியாழக்கிழமை (19) வீட்டை விட்டு சைக்கிளில் புறப்பட்டுச் சென்றவர் இன்று வரை [illegible] திரும்பவில்லை.

இவரிடம் கைத்தொலைபேசியும் உள்ளது. எனினும் அவருடன் தொடர்பு கொள்ளமுடியவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அ.நளாயினி கடந்த 2010 ஆம் ஆண்டு புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய தலையில் ஷெல் துண்டு ஒன்று உள்ளது என்றும் ஓரளவு மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் அவர் சாதாரண மனநிலையிலேயே உள்ளதாக குடும்பத்தவர் கூறுகின்றனர்.

# கம்பஹா வைத்தியசாலையில் ஒருவர் குத்திக் கொலை

கம்பஹா வைத்தியசாலையில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை இக்கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரியும் 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பில் கம்பஹா வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் காணிகள் மக்களிடம்

கிளிநொச்சி

இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ள கிளிநொச்சி நகர் கிராம சேவையாளர் பிரிவில் பரவிப்பாஞ்சானில் உள்ள காணிகளை காணி உரிமையாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

குறித்த காணியின் சொந்தக்காரர்களுக்கு அவரவரின் காணிகளை அத்தாட்சிப் படுத்தும் முகமாக நேற்று முன்தினம் காலை இராணுவ உயர் அதிகாரிகள் அழைத்துச் சென்றனர்.

பரவிப்பாஞ்சான் காணிகளில் 2008 முதல் 58 ஆவது இராணுவப் படையணி நிலைகொண்டுள்ளது.

இக் காணிகளை மீள ஒப்படைக்குமாறு கோரி அரசிடமும் படை அதிகாரிகளிடமும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. மற்றும் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய வற்றை பரவிப் பாஞ்சான் மக்கள் கோரிவந்தனர்.

இந்த காணிகளை கையளிக்கும் நோக்கில் அதிகாரிகள் காணிகளை அத்தாட்சிப் படுத்தும் வகையில் பரவிப்பாஞ்சானுக்கு அழைத்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் அரங்கம்

## மானிப்பாய் வடக்கிற்கு சனசமூக நிலையம் தேவை

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலையத்தினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

மேற்படி சனசமூக நிலையமானது நீண்டகாலமாக மிக சிறப்பாக இயங்கி வந்ததாகவும் ஆனால் தற்பொழுது இவ் சனசமூக நிலையம் மூடிய நிலையில் காணப்படுவதுடன் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனது.

அதனால் அப் பகுதியில் தற்பொழுது எந்தவிதமான பத்திரிகையும் கிடைப்பதில்லை. அப்பகுதி இளைஞர், யுவதிகள், வயோதிபர்கள் எனப் பலரும் பல கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிகின்றது. எனவே இது விடயத்தில் உரிய தரப்பினர் தலையீடு செய்து இவ் சனசமூக நிலையத்தினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மானிப்பாய் வடக்கு மக்கள்.

## ஆனைக்கோட்டையில் காலாவதியான பொருட்கள்

ஆனைக்கோட்டை, உயரப்புலம், சாவற்கட்டு, சுதுமலைப் பகுதிகளில் இயங்கிவரும் சில வியாபார நிலையங்களில் காலம் கடந்த சில பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பகுதிகளில் இயங்கிவரும் பலசரக்குக் கடைகள் சிலவற்றில் உணவகங்கள், வெதுப்பகங்கள் ஆகியவற்றிலும் காலங் கடந்த சில பொருட்களை விற்று வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர். தாம் கவனித்து வாங்கும் பொருட்களின் திகதிகள் முடிவடைந்தால் மாற்றித் தருவதாகவும் அவ்வாறு கவனிக்காமல் கொள்வனவு செய்யும் வாசிப்பு பழக்க வழக்கம் அற்ற மக் கள் இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே இது விடயத்தில் உரியவர்கள் தலையீடு செய்து இவ் வியா பாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என மக்கள் வேண்டி உள்ளனர்.

உயரப்புலம் மக்களின் நலன் நாடும் பொதுமகன்.

# பிக்குமாரின் எதிர்ப்பினால் மூடப்பட்ட ஜும்மா பள்ளிவாசல்

குருநாகல் வெல்லவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தம்பகம என்ற இடத்தில் அமைந்துள்ள அல்-அக்ரம் ஜும்ஆ பள்ளி வாசல் புத்த பிக்குமாரின் எதிர்ப்பினால் மூடப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கபபட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஜும்ஆ பள்ளிவாசலுக்கு எதிராக நீண்டகாலமாக புத்த பிக்குமாரினால் எதிர்ப்புகளும் விடுக்கப்பட்டுள்ளன.

திடீரென நேற்று இரவு 7.30 மணியளவில் பிக்குமாரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரும் பள்ளிவாசலுக்கு முன்பாக பிரித் ஓதியுள்ளனர்.

இதனையடுத்து பள்ளி வாசல் நிர்வாகிகள் வெல்லவ பொலிஸிற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து வந்து பள்ளிவாசலை மூடும்படி கூறியதாக மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது குறித்து வெல்லவ பொலிசார் கூறுகையில், பாலர் பள்ளியாக நீண்டகாலமாக இயங்கி வந்த மேற்படி இடத்தில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு அப்பிரதேச மக்களும் பிக்குமாரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

பிக்குமாரையும் பிரதேசவாசிகளையும் பள்ளிவாசல் நிர்வாகிகளையும் தாங்கள் அழைத்து இப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்காக கலந்துரையாடலை நடத்திவருவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## யாழ். வைத்திய சாலை விவகாரம்:

# உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டம்

யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற அரச சொத்து ஊழல் தொடர்பான விசாரணையில் முடிவுகள் எட்டப்படாத நிலையில் வடமாகாண வைத்தியசாலைகளில் நேற்று முன்தினம் அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதற்கு சுகாதார அமைச்சினால் தீர்க்கமான முடிவுகள் கிடைக்கப்படாவிட்டால் குறுகிய காலத்தில் நாடளாவிய ரீதியில் போராட்டம் நடாத்தப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தாய் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் பா.சாய்நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 3 அம்ச கோரிக்கைளை முன் வைத்து வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். போதனா வைத்தியசாலையின் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தியும் 3 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதாக கூறி இன்று வரை அதை நடைமுறைப்படுத்த தவறியுள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமாரின் வீட்டின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் நிலையில் எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் அரச மருத்துவ சங்கத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட்ட நிலையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது சுகாதார அமைச்சு பாரபட்சம் காட்டி வரும் நிலையில் இந்த அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## கரவெட்டிப் பிரதேச செயலர் கடமையேற்பு

யாழ். கரவெட்டிப் பிரதேச செயலாளராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சண்முகராஜா சிவஸ்ரீ கடமையை கடந்த திங்கட்கிழமை பொறுப் பேற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சண்முகராஜா சிவஸ்ரீ, கரவெட்டி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய போது யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று 11 மாதங்களாக யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமை புரிந்தார்.

தற்போது மீண்டும் கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குப் பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.



நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் சிறார்களின் வினோத உடை நிகழ்வையும், அணி நடையையும் காணலாம். *(படம்: மாவிட்டபுரம்)*

## முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு

வலிகாமம்

முல்லைத்தீவு பிரதேச சபை வளாகத்தில் உள்ள கைவிடப்பட்ட கிணற்றில் இருந்து ஒரு தொகுதி ஆயதங்கள் கடந்த 20ஆம் திகதி மீட்க்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பா ணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிருதேச சபையின் ஆலுவலர்கள் வழுங்கிய தகவலின் அடிப்படையில் மேற்படி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதில்,விமான எதிர்ப்புக் குண்டுகள் 03 மற்றும் துப்பாக்கிகளுக்கான ரவைகள் 560 உம் அடங்குவதாக தெரியவருகிறது.

# கைத்தொலை பேசியில் ஆபாச படம் இளைஞர்கள் இருவர் கைது

## வவுனியாவில் சம்பவம்

வலிகாமம்

ஆபாசப்படங்களை கையடக்கத் தொலைபேசியில் சேமித்து வைத்திருந்த இளைஞர்கள் இருவர் வவுனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதிக்கடமையில் ஈடுபட்ட பொலிஸார் இரு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் வழிமறித்து சோதனை செய்தனர், அப்போது அவர்கள் வசம் இருந்த கையடக்கத் தொலைபேசிகளும் அவற்றிலிருந்த கோப்புக்களும் பொலிஸாரினால் சோதனையிடப்பட்டன. இதன்போது, அக் கையடக்கத் தொலைபேசிகளில் ஆபாசப்படங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து இரு இளைஞாகளும் பொலிசார் அவர்கள் மீது விசாரணை மேற்கொண்டதுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

# வடமாகாணத்திற்கான தொழிற்கல்வி பயிற்சித் திட்டம் உருவாக்கம்

இளைஞர் விவகார திறன்கள் அமைச்சு வடமாகாணத்திற்கான தொழிற்கல்வி பயிற்சித் திட்டத்தை உருவாக்குக்கவுள்ளது.

இளைஞர் விவகார திறன்கள் விருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வடமாகாண திட்ட வரைபிற்கான மாநாடு யாழ்.பொது நூல் நிலைய கோட்போர் கூடத்தில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. இளைஞர் விவகார திறன்கள் அமைச்சு ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் ஏச்.எஸ்.சுரவீர தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில்

தொழிற்கல்வி வாய்ப்புகள், தொழிற்கல்வி மூலமான பயிற்சி நெறிகள், வேலை வாய்ப்புகள் தொடர்பான திட்டநெறியை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அதிகாரிகளால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதேவேளை, வடமாகாண கைத்தொழில்துறை, விவசாயத்துறை, சேவைத்துறை சார்ந்த பயிற்சிநெறி தேவைகள் பற்றியும் அடையாளம் காணப்பட்டது. வடமாகாண சபையின் மூத்த ஆசிரியர்கள், யாழ். மாவட்ட செயலக சிரேஷ்ட அதிகாரிகள், மாவட்ட தனியார் தொழில் வழங்குநர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள், சமூக பிரதிநிதிகள் ஆகியோர் இம் மாநா ட்டில் கலந்துகொண்டனர். குறித்த மாநாட்டில் பொறியியலாளர் கலாநிதி முத்துக்கிருஸ்னன் சர்வானந்தன் வடமாகாண த்தின் பொருளாதாரம், தொழிற்து றைக் கட்டமைப்பு, மற்றும் தொழிற்சந்தை தொடர்பான விரிவுரை ஒன்றும் நடத்தப்பட்டது.

## நேர்மைக்கான விருது

(வலிகாமம்)

இலங்கை ரான்ஸ்பேரன்ஸி இன்ட நெஷனல் அமைப்பானது ஐக்கிய நாடுகள் சர்வதேச ஊழல் எதிர்ப் புத் தினத்தையொட்டி இலங்கையின் எட்டாவது தேசிய நேர்மைத் திறன் விருதுகளை வழங்கவுள்ளது.

இந்த நேர்மைத்திறன் விருதினைப் பெற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் நேர்மைத் திறன். விருதானது பல்வேறு துறைகளிலும் ஊழ்லுக்கு எதிராக தமது உயிரையும் தொழிலையும் எதிர் காலத்தையும் பணயம் வைத்து செயற்பட்டவாகளுக்காக வழங்கப்படவுள்ளது.

# மன்னார் முருங்கனில் ஆட்லரி குண்டு மீட்பு

## முருங்கன் பொலிஸார் தகவல்

மன்னார் செட்டியார் கட்டையடம்பன் பகுதியில் மறைத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் 162 மில்லி மீற்றர் ரக ஆட்லறி குண்டை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை பொலிஸார் மீட்டுள்ளதாக முருங்கன் பொலிஸ் நிலைய பொருப்ப திகாரி சி.ஏ.கமல் குணவர்தன தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முருங்கன் பொலிஸ் நிலைய பொருப்பதிகாரி சி.ஏ.கமல் குணவர்தன தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த ஆட்லறி குண்டினை மீட்டுள்ளனர்.

பின் குறித்த குண்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு செயலிழக்கச், செய்யப்பட்டுள்ள தாகவும் முருங்கன் பொலிஸ் நிலைய பொருப்பதிகாரி சி.ஏ.கமல் குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி குண்டுகள் யுத்த காலப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டவையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# சுன்னாகத்தில் பொலிஸ் நடமாடும் சேவை

வலிகாமம்

சுன்னாகம் பொலிசாரின் நடமாடும் சேவை நாளை மறுதினம் 28 ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பெறுமதியான ஆவணங்கள் தொலைத்தவர்களுக்கான பொலிஸ் முறைப்பாடுகள் செய்தல், வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பயிற்சிகள், மருத்துவ சேவை உட்பட பல்வேறு சேவைக ளும் இதில் வழங்கப் படவுள்ளன.

உடுவில் பிரதேச செயலகத்தைச் சோந்த ஜே.185 உடுவில் மத்தி வடக்கு ஜே.186, உடுவில் வடக்குஜே195,சுன்னாகம் வடக்கு ஜே.196,சுன்னாகம்தெற்கு ஜே.197, சுன்னாகம் கிழக்கு ஜே.198, சுன்னாகம் மத்தி ஜே.199, சுன்னாகம் மேற்கு ஜே.200, கந்தரோடை ஜே .202, ஏழாலை தென்மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சோந்த மக்களை இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொலிசார் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜுலை மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை

## அபராதத் தொகையை அதிகரிப்பதால் மட்டும் வீதி விபத்துக்கள் முழுதாகக் குறையா

வீதி விபத்துக்களினால் நாளாந்தம் ஆகக் குறைந்தது ஆறு பேராவது கொல்லப்படுகிறார்கள் என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் றொஷான் குணவர்த்தனா தெரிவித்துள்ளார். இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 1226 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறித்த ஆறு மாதங்களில் 20,038 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். டெங்கு நோயினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, வீதி விபத்துக்களினால் இறப்போரின் எண்ணிக்கை அதிகமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அவர் ஓர் உதாரணத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற பதினைந்து வீதி விபத்துக்களில் 18 பேர் கொல்லப்பட்டனரென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் முழு ஜனவரி மாதத்திலும் டெங்கு நோயினால் மரணமானவர்களின் எண்ணிக்கை 18 என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாளில் 18 பேர்களை வீதி விபத்துக்கள் பலியெடுத்திருக்கின்றன. முப்பது நாட்களில் அதே எண்ணிக்கையானவர்களை டெங்கு நோய் பலியெடுத்திருக்கிறது. மேலோட்டமாகப் பார்த்தாலும், ஆழமாகப் பார்த்தாலும் இந்த ஒப்பு நோக்குதல் சரியானதல்ல. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இலங்கையில் உயிர்களைக் கொள்ளை கொண்ட மலேரியா நோய் அளவுக்கு டெங்கு காவு கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஏனெனில் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் காத்திரமான முறையில் அரசு கையாண்டு வருகிறது. அதுமட்டுமல்ல, பரந்தளவு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருக்கிறது.

ஆனால் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கமோ அல்லது உள்ளூராட்சி சபைகளோ எடுக்கவில்லையென்றுதான் கூற வேண்டும். யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளை எடுத்துப் பாருங்கள். நகரின் மையப் பகுதியில் இருக்கும் வீதிகள் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் எந்தளவுக்கு நெருக்கமான பாதைகளாக இருந்தனவோ பெரும்பாலும் அதேயளவுக்கு ஒடுக்கமானவையாகவே இருக்கின்றன. ஆனால் வாகனங்களின் எண்ணிக்கை பல மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையும் அதிகரித்துள்ளது. எனவே சனநெரிசலும், வாகனங்களின் அதிகரிப்பும் வீதி விபத்துகளை அதிகரிக்கவே செய்யும். அதுமட்டுமல்ல, சில வீதிகள் வாகனப் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குக் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதற்காக வெறுமனே சம்பந்தப்பட்ட அதிகார சபைகளையோ, அதற்குப் பொறுப்பான தனி நபர்களையோ குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை.

யுத்தம் சீரழித்த மண் இது. சுமார் முப்பது வருடங்களாக அவலங்களைத் தாங்கி வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, வீழ்ந்து கெட்ட இடமும் இதுதான். வீதிகள், வீடு வாசல்கள் மட்டுமல்ல, அழிவுகளை அந்த மக்களும் தான் சந்தித்தார்கள். நிர்வாகக் கட்டமைப்புகளின் நெற்றிப் பொட்டுகளுக்கு நேரே துப்பாக்கிகள் நீண்டு போய் நின்றன. அரசிடம் நிதி பெற்று அபிவிருத்தி வேலை செய்ய முயன்றால் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் என்ற சாக்கில் மண்டையில் போட்டு விடுவார்கள். முன்னாள் யாழ்ப்பாண எம்.பியும், மாநகர சபை மேயருமான அல்பிரட் துரையப்பாவுக்கு இது தான் நடந்தது. துப்பாக்கிளும், கைக்குண்டுகளும், தரைக் குண்டுகளும் சன்னதமாடிய இந்த மண்ணில் மீள்கட்டமைப்பு வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, பொதுவாக வடபகுதிக்கே பொருந்தும்.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய மாநகரங்களை எடுத்துப் பார்த்தாலும் வீதி விபத்துகள் ஏற்படுவதற்குப் பல காரணிகள் இருக்கின்றன. கொழும்புக்கு மட்டும் சுமார் 15 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் நாளாந்தம் வந்து போகிறார்கள். ஓரளவுக்கு அங்கே வீதியைக் கடப்பதற்கு மஞ்சள் கோடுகள், மேம்பாலங்கள், நிலத்துக்குக் கீழான போக்குவரத்து வசதிகள் எல்லாம் குறிப்பிடக்கூடிய அளவுக்கு உள்ளன. இருந்தாலும் மேல்தட்டு மக்களின் வாழ்க்கைத்தர அதிகரிப்பும், வாகனங்களின் இறக்குமதியும், உற்பத்தி அதிகரிப்பும் பாதுகாப்பான போக்குவரத்தைக் குறைத்துவிடும் என்பதையும் மறுக்க முடியாது. வெறுமனே வீதிப் போக்குவரத்துக் குற்றங்களுக்கு அபராதத் தொகையை அதிகரிப்பதால் மட்டும் விபத்துக்களை முற்றுமுழுதாகத் தடுத்துவிட முடியாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# மேடைப்பேச்சு கயிற்றில் நடப்பது போன்ற ஒரு கலை

எழுத்தாளனின் வேலை எழுதுவது மட்டுமில்லை, நல்ல இலக்கியங்களை அறிமுகம் செய்வதும், சமூக அக்கறை சார்ந்து தன்னளவில் செயல்படுவதும், பிற படைப்புகளை வாசித்து எதிர்வினை தருவதும், பள்ளி, கல்லூரி, ஊடகம் என பலதரப்பிலும் எழுத்து, வாழ்க்கை சார்ந்த அனுபவங்களை, வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாகும்.

அதிலும் இலக்கியம், தத்துவம், மொழியியல் என பல்துறை சார்ந்து உம்பர்தோ ஈகோ, போன்றவர்கள் வருடத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கலந்துரையாடல்களில் கலந்து கொள்கிறார்கள். நல்ல இசைக்கலைஞர்கள் எவ்வளவு பார்வையாளர்கள் இருக்கிறார்கள் என்பதில் கவனம் கொள்ளாமல் கிடைத்த மேடைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். அது தான் சிறப்பு, அப்படி தான் தமிழின் முன்னோடி எழுத்தாளர்களும் இயங்கியிருக்கிறார்கள்

உலகெங்கும் இலக்கியவாதி வருசத்தில் மூன்றுமாதம் இது போன்ற செயல்பாடுகளில் தனது நேரத்தைக் கழிக்கிறான். மேற்குலகில் அதற்கான மரியாதையும் வருமானமும் முறையாகக் கிடைக்கிறது. கூட்ஸி என்ற நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ஒரு பல்கலைகழகத்தில் சிறப்புரை ஆற்ற முப்பது லட்சம் பணம் பெற்றிருக்கிறார். மார்க்வெஸ்ஸின் இலக்கிய சிறப்புரையை நேரடி ஒளிபரப்பு செய்ய இரண்டு கோடி அவருக்குத் தரப்படுகிறது.

தமிழ் சூழலில் அது சாத்தியமில்லை என்றாலும் அந்தப் பணியைச் செய்வது எழுத்தாளர்களின் கடமை என்பதால் அவரவர் விருப்பம் சார்ந்து கூட்டங்கள், சந்திப்பு, கருத்தரங்குகள் நடந்து வருகின்றன. இளம்தலைமுறை வாசகர்கள் ஆர்வமாக இணைந்து வேலை செய்கிறார்கள் என்பதே இதில் கூடுதல் சந்தோஷம்.

சூழலைப்பற்றி தொடர்ந்து ஆதங்கப்படுவது. குறை சொல்வதை விட அதை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சிறு முயற்சியும் முக்கியம் என்றே தோன்றுகிறது

இந்தக் காரணத்தால் மட்டுமே நான் தொடர்ந்து பல்வேறு மேடைகளில் பேசிக் கொண்டிருக்கிறேன். வருசத்தில் டிசம்பர், ஜனவரி இரண்டு மாதங்களில் மட்டுமே தமிழ் எழுத்தாளர்கள் பொதுவெளியில் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறார்கள், கலந்து பேசுகிறார்கள், செய்தித் தாள்களில் அவர்களை பற்றி இரண்டுவரி வெளியாகிறது, அதிலும் புகைப்படம் மட்டுமே வெளியாகிறது பேசிய விசயம்



கண்டுகொள்ளப்படுவதேயில்லை. மற்ற பத்து மாதங்கள் தனிமை தான் துணை, எழுத்து, வாசிப்பு, பயணம், சினிமா அல்லது இசை, சிறிய நண்பர் வட்டம் இவ்வளவு தான் எழுத்தாளனின் உலகம், அப்படியிருப்பது போதும் என்றே படுகிறது

## எஸ்.ராமகிருஷ்ணன்

ஒவ்வொரு கூட்டத்திலும் கடைசியில் பேசுவது என்பது ஒரு தண்டனை, அதுவே நிறைய நேரங்களில் மனச்சோர்வை ஏற்படுத்திவிடுகிறது. நான் நல்லபேச்சாளன் இல்லை. ஆனால் நான் படித்த, நினைத்த விஷயங்களை என்னால் துல்லியமாகப் பேச முடியும், நினைவில் இருந்து எதையும் மேற்கோள் காட்ட முடியும், கொடுத்த புத்தகத்தை ஒருபோதும் வாசிக்காமல் பேசமாட்டேன், அப்படி இருப்பது என் இயல்பு, அதில் சிறப்பு ஒன்றுமில்லை,

மற்றபடி மேடைப்பேச்சை நான் கேலி செய்பவன் என்பதால் அதில் நானும் சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற கவனம் எனக்கு அதிகமுண்டு, என்னை உந்தித்தள்ளி பேசவைப்பது நான் படித்த புத்தகங்களே, ஆகவே அதற்கு தான் நான் நன்றி சொல்லவேண்டும்.

எனது மேடைப்பேச்சு அந்த நிமிசம் மனதிற்கு தோன்றியதைப் பேசுவது, எதைப்பற்றி இருக்கலாம் என்று நான்கு அல்லது ஐந்து மையச் சொற்களை மட்டுமே குறிப்புகளாக வைத்துக் கொள்வேன், மற்றபடி உரை மனதில் தோன்றும் எண்ணங்களின் தொடர்ச்சியே.

குளத்தின் மீது வீசப்பட்ட கல் ஏற்படுத்தும் தவளைப் பாய்ச்சல் போல பேச்சு ஒரு மாயம், அது பேசும் தருணத்தில் மட்டுமே கை கூடுகிறது, ஒரு போல மறுமுறை சாத்தியமே ஆகாது

மேடைப்பேச்சில் பார்வையாளர்களை முட்டாள் ஆக்கவோ, ஏமாற்றவோ, நினைக்கக் கூடாது. மேடையில் இருப்பவர்களை விட அவர்கள் படித்தவர்கள் அறிவாளிகள். பார்வையாளனின் மௌனம் புரிந்து கொள்ள முடியாத ஒரு வலிமை, மேடை ஒரு சந்தர்ப்பம். அங்கே பேசப்படும் விசயம் தான் முக்கியம், பேசும் மனிதன் இல்லை, அதே நேரம் மேடைப் பேச்சு கயிற்றில் நடப்பது போன்ற கலை, தவறினால் நீ காலி என்று என்னை உருவாக்கிய இலக்கிய ஆசான் எஸ்.ஏ.பெருமாள் அவர்கள் ஒரு முறை சொன்னார், அவர் மிகச்சிறந்த மேடைப்பேச்சாளர், அது ஒவ்வொரு மேடையில் இருக்கும் போதும் என் நினைவிற்கு வருகிறது.

## வடமாகாண ஆசிரியர் இடமாற்றம், செப்டம்பருக்கு முதல் விண்ணப்பிக்கவும்

வடமாகாணப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென்று நிர்வாகத்துக்குப் பொறுப்பான மேலதிக கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார் இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வரும்.

இடமாற்ற விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் ஊடாக உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இடமாற்றத்தினை சான்றுப்படுத்தக்கூடிய ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

மாகாணக் கல்வித் திணைக்களம், வலயங்களுக்கு வழங்கியுள்ள விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாகவுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.


## பொலிகண்டியில் வலம்புரிச் சங்கு

(வல்வெட்டித்துறை)

வடமராட்சியில் வலம்புரி சங்கு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. பொலிகண்டி, ஆலடி ஒழுங்கையில் உள்ள வீட்டு வளவில் விறகு எடுக்கச் சென்ற யுவதி ஒருவர் இந்த வலம்புரிச் சங்கை கண்டெடுத்துள்ளார்.

தற்போது அவருடைய பூஜை அறையில் வைக்கப்பட்டுள்ள இதனை கிராம மக்கள் வந்து வணங்கிச் செல்கின்றனர்.

இதேநேரம் தென்னிலங்கை வியாபாரி ஒருவர் மூன்று இலட்சம் ரூபாவிற்கு சங்கை கொள்வனவு செய்ய முற்பட்டுள்ளார். வலம்புரிச் சங்கை விற்பதற்கு அவர்கள் விரும்பவில்லை.



# எமது கணினி உலகம்

ஒரு நாளைக்கு சராசரியாக எட்டு முதல் பத்து மணி நேரம் கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்திருக்கிறோம். உலகில் வேறு எந்த பொருளையும் இவ்வளவு நேரம் நாம் பார்த்து கொண்டிருந்ததேயில்லை. திரையை பார்த்துக் கொண்டும் படித்துக் கொண்டு இருப்பது அலுப்பதேயில்லை. என்ன வசீகரமது?

ஒரு செல்போன் விளம்பரம் ஒன்றில் காதில் போனை வைத்தபடியே நாளெல்லாம் பேசிப்பேசி தலை ஒருச்சாய்ந்து போன மனிதனை காட்டுவார்கள். அவன் எங்கே போனாலும் தலையை சாய்த்துக் கொண்டே பேசுவான். கணிணி முன் நாள் எல்லாம் இருப்பவர்கள் கிட்டதட்ட அப்படிதானியிருக்கிறோம்.

சில வேளைகளில் இந்த கணிணி திரை ஒரு மாபெரும் கடற்கரை என்று தோன்றும். யார் யாரோ எதற்காகவே கடந்து போகிறார்கள். அமர்ந்திருக்கிறார்கள். பேசிக் கொள்கிறார்கள். இரகசியமாக திட்டமிடுகிறார்கள். சண்டையிடுகிறார்கள். குற்றம் புரிகிறார்கள். தியானம் செய்கிறார்கள். அன்பை பகிர்ந்து கொள்கிறார்கள். உடற்பயிற்சி செய்கிறார்கள். அத்தனையும் ஒரே இடத்தில் சாத்தியமாகிறது.

சில வேளைகளில் இந்தத் திரை ஆசைகளின் மியூசியம் ஒன்றிற்குள் நுழைந்துவிட்டதைப் போல இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்துவமான ஆசைகள். கனவுகள், ரகசியங்கள். அதை அவரவர் அறைகளில் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒளித்து வைத்து கண்டுபிடிக்க சொல்கிறார்கள். உலகின் ஆசைகள் ஒட்டுமொத்தமாக கணிணி வழியாகவே ஒருங்கிணைக்கப்படுகின்றன. காட்சிப்படுத்தப்படுகின்றன.

யாராவது ஒரு நாள் முழுவதும் கடலை பார்த்தபடியே இருந்திருக்கிறார்களா என்ன ? அல்லது ஒரு மலையை எட்டு மணி நேரம் இடைவிடாமல் பார்த்து கொண்டேயிருக்க முடிகிறதா, கொட்டும் மழையை கூட பத்து நிமிசங்களுக்கு மேல் ஆர்வமாக யாரும் பார்ப்பதேயில்லை. உலகின் பேரழகான அதிசயங்கள், பூக்களின் பள்ளதாக்குகள், பசுமைவெளிகள் கூட ஐந்து நிமிசத்தில் அலுத்து போய்விடுகிறது. குழந்தைகளை கூட இன்று எவரும் இப்படி உற்று பார்த்து கொண்டேயிருந்ததேயில்லை. பின் எப்படி கணிணி மட்டும் இப்படி ஈர்க்கிறது.

சில நேரம் கணிணியின் திரை அழகான பெண்ணைத் பின் தொடர்வதைப் போல நம்மை மீறிய ஈர்ப்பில் அழைத்துச் சென்று கொண்டேயிருக்கிறது. பின்னால் போவதன் மயக்கமே நம்மை கூட்டிப்போகிறது.

சில வேளைகளில் அறியாத அடர்ந்த கானகம் ஒன்றினுள் செல்வதை போல பயம், வசீகரம் குழப்பம் திரும்பி போக முடியாதோ என்ற உள்ளுணர்வு, அதை தாண்டி காணும் வியப்பு, அறியாத மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், என்று வேறு உலகம் திறந்து கொள்கிறது.

கொலம்பஸ் நாடுகளை தேடி கடலில் அலைந்து திரிந்த பயணத்தை விடவும் கம்ப்யூட்டர் முன் அமர்ந்தபடியே உலகை தேடும் பயணம் பெரியது தானோ.

ஆனாலும் திரையை பார்த்து கொண்டிருப்பது புற உலகை விட்டு நம்மை துண்டிக்கிறது. தனிமைப்படுத்துகிறது. உதடுகளை இறுக்கிப் பூட்டிவிடுகிறது. தனக்கு தானே பேசிக் கொள்ளும் மனிதனைப் போலாக்கி வைத்திருக்கிறது.

ஏன் கணிணி திரை மட்டும் இவ்வளவு வசீகரமாக இருக்கிறது. சினிமா தியேட்டரில் அடுத்தடுத்து இரண்டு காட்சிகளுக்கு மேல் பார்க்க முடிந்ததில்லை. காதலிக்கும் பெண்ணின் முகத்தை கூட ஒருவன் இவ்வளவு ஆசையாக அருகாமையில் நெருக்கமாக பார்த்து கொண்டேயிருப்பானா என்று சந்தேகமாகவே இருக்கிறது. திரை பார்த்தல் என்ற இந்த கணிணி செயல்பாடு ஒரு தொற்றுபோய்போல உடனே பரவிவிடுகிறது. மீள்வது எளிதானதேயில்லை.

திரை மெல்ல நம் உடலின் செயல்பாட்டினை ஒடுக்கத் துவங்குகிறது. உடலை விட மனதே நம்மை இயக்குகிறது என்று நம்ப வைக்கிறது. ஒரே நாற்காலி எதிரே கணிணியின் திரை. அது பேசுகிறது. பாடுகிறது. மௌனமாகிறது. பேசவைக்கிறது. கோபப்பட வைக்கிறது. காதலிக்க செய்கிறது. திறமையை வெளிப்படச் செய்கிறது. பசி மறந்து தாகம் மறந்து இடையிடையே அழைக்கும் தொலைபேசி குரல்களை மட்டுமே அனுமதித்து அது நம்மை முற்றாக கவ்விக் கொண்டிருக்கிறது. யோசிக்கையில் உலகில் வேறு எந்த பழக்கமும் இவ்வளவு தீவிரமாக மனிதனை பற்றிக் கொண்டதில்லை.

சிறுவயதில் விளையாட்டு வீரர்கள் பந்தோடு நடந்து போவதையும், பந்தை அருகாமையில் வைத்து கொண்டு உறங்குவதையும் பார்த்திருக்கிறேன். அப்போது வேடிக்கையாக இருக்கும் அவர்கள் பந்தோடு பேசுவார்கள். பந்தை கோபித்துக் கொள்வார்கள். அந்த மனநிலையை விட முற்றிய மனநிலை கணிணி திரை உருவாக்குகிறது.

கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து அழுபவர்களை கண்டிருக்கிறேன். லேப் டாப்பிற்கு பிறந்தநாள் கொண்டாடும் இளைஞர்கள் இருக்கிறார்கள். வயதை மறந்து கணிணி அனைவரையும் கட்டிப் போட்டு வைத்திருக்கிறது. ஒரு மாபெரும் தியான மண்டபத்தில் அமர்ந்திருப்பதைப் போல யாவரும் அவரவர் கணிணி முன்பாக அமர்ந்திருக்கிறார்கள். எதையோ தேடிக் கொண்டும் பகிர்ந்து கொண்டுமிருக்கிறார்கள். அல்லது மாபெரும் சந்தை கூடம் ஒன்றினுள் நுழைந்துவிட்டதை போன்றுமிருக்கிறது.

நம் காலத்தின் மாபெரும் ஒற்றை செயல் கம்ப்யூட்டர் முன் அமர்ந்திருப்பது தானோ.

புத்தகங்கள் இப்படி வசீகரமானதில்லை. அது ஒவ்வொருவரையும் ஒருவிதமாகவே அணுகுகிறது. நெருக்கம் கொள்கிறது. இசை வசீகரமானது தான் ஆனால் அதன் முன்னே யாவரும் ஒன்று போல ரசனை கொள்வதில்லை. வேறு எந்த கலைகள் விஞ்ஞான உபகரணத்தை விட கணிணியின் திரை வசீகரமாக இருக்கிறது. இறுக்கமாக பிடித்து வைத்துக் கொள்கிறது.

தினமும் கம்ப்யூட்டரில் நான் என்ன பார்க்கிறேன் என்ன செய்கிறேன் என்று ஒரு குறிப்பேட்டினை எழுதலாம் என்று முயற்சித்தேன். ஒரு மாத காலத்தில் அது ஒரு மாபெரும் நாவல் அளவு வளர்ந்துவிட்டது. பயமாக இருந்தது. சட்டென சில நாட்கள் கணிணி பக்கமே போக கூடாது என்று அதை அணைத்தே வைத்திருந்தேன். பழையபடி பேனா காகிதங்கள், நோட்டுகள் என்று திரும்பினேன். ஆனால் ஏதோ உடல்நலமற்று போய் நோயாளியான ஒருவன் இவ்வளவு தான் தன்னால் முடியும் என்று உணர்ந்ததை போல மனது மிகவும் சோர்வு கொண்டதோடு என்றோ கைவிட்ட பழக்கத்தை மறுபடி செய்து பார்ப்பதை போலவும் உணர செய்தது.

சினிமாவில் எழுவதால் இன்றும் பேப்பர், பேனா என்ற பழக்கமிருக்கிறது. இல்லாவிட்டால் அது என்னைவிட்டு பேனாவில் எழுதுவது முழுமையாக போயிருக்கும். ஆனால் பேனாவில் எழுதும் போது ஏதோ சிறுவயது செயலை செய்வது போலதான் தோன்றுகிறது. எடிட் செய்யவும் கதை சொல்வதன் பல்வேறு சாத்தியங்களை உருவாக்கி பார்க்கவும் முடிவதில்லை.

கம்ப்யூட்டர் எனும் மாய விளையாட்டை நாள் எல்லாம் விளையாடிக் கொண்டிருப்பவர்களை அறிவேன். அவர்கள் திரையை வென்றுவிட தனது அத்தனை சாத்தியங்களையும் பயன்படுத்துகிறார்கள். தோற்றுப் போகையில் வருத்தம் கொள்கிறார்கள். வெற்றி காண்கை ணயில் கொண்டாடுகிறார்கள். வெளி உலகின் பிரம்மாண்டம், வசீகரம், பிரச்சனைகள், சந்தோஷங்கள் என எதுவும் இன்று முக்கியமாகவில்லை. நமது அடையாளங்கள் இல்லாமல் நாம் உலவவும் அறிந்து கொள்ளவும் கணிணி மட்டுமே அனுமதிப்பது தான் இதன் காரணமா?


கணிணி திரை உருவாக்கும் முக்கிய பிரச்சனையாக உட்கார்ந்தே இருப்பது என்ற பழக்கத்தையே சொல்வேன். அது கணிணி திரை இல்லாவிட்டாலும் நம் கால்களை கட்டிப்போட்டுவிடும் அபாயத்தை உருவாக்க கூடியது. வெளியில் நடப்பதற்கோ, ஓடுவதற்கோ, உலகை சுற்றி அலைவதற்கோ நமது கால்கள் தயங்குகின்றன. எங்கே பயணம் செய்தாலும் அது ஓய்வை நோக்கியதாகவே இருக்கிறது. அடுத்த வீதியில் உள்ள ஒன்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு கூட உடல் விரும்புவதில்லை. கூகிள் தேவைப்படுகிறது. உலகை நாம் சுருக்கி கொண்டே வந்து வெறும் தகவல்களாக மாற்றிக் கொண்டிருக்கிறோமா? அல்லது காட்சி பிம்பங்களாக மட்டுமே உலகம் போதுமானதாக இருக்கிறதா?

ஆரம்ப காலத்தில் கணிணியை அது ஒரு ஜன்னல் அது நம் வீட்டிற்குள் இருக்கிறது. விரும்பும் போது திறந்து வேறு உலகை பார்த்து கொள்கிறோம் என்று தான் பலரும் நினைத்தார்கள் இன்று அந்த மனநிலை அப்படியே மாறியிருக்கிறது.

இன்று கணிணி தான் வீடு. உலகம். அதிலிருந்து வெளியே போக சிறிய கதவு இருக்கிறது. அக்கதவு எப்போதாவது திறந்து கொள்ளும்போது உடன்வாழும் மனிதர்களையும் சொந்த தேவைகளையும் பார்த்து கொள்கிறோம்.

கணிணி பலரது வீடுகளிலும் அணைக்கப்படுவதேயில்லை. அது பகலிரவாக ஓடிக்கொண்டேயிருக்கிறது. நமது உறக்கமும், உடலின் தேவைகளும் மட்டுமே கணிணியை விட்டு நம்மை துண்டித்திருக்கிறது. அதற்கும் மாற்று உருவாகினால் இருப்பின் ஆதாரங்கள் சிதறடிக்கப்படக்கூடும். அதுதான் பயமாக இருக்கிறது.

***நன்றி: இணையம்***



# கழுகுக் கண்கள்

எனது கூட்டில் இருக்கும் கருங்காலிப் பலகையினால் செய்யப்பட்ட நாற்காலியில் அமர்ந்து பகல் உணவைச் சாப்பிட்ட பின்னர் கண் அயர்ந்துவிட்டேன். திடீரென்று நான் கண் விழித்த போது நான் புதுடில்லியில் உள்ள கழுகுகளின் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு வந்தபோது படித்த ஒரு நூலின் ஞாபகம் வந்தது.

எனது கூட்டில் உள்ள நூலகத்தில் இருந்து அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். இதனை எழுதியவர் Fyodor Mikhailbich Dostoevsky என்ற ரஷ்யப் பேராசிரியராவார். இவர் 1821ஆம் ஆண்டு முதல் 1881ஆம் ஆண்டு வரை உயிர் வாழ்ந்தார். அவரது இந்த நூலின் பெயர் "குற்றச் செயல்களும் அதற்கான தண்டனையும்" என்பதாகும்.

ஒரு சமூகம் நாகரீகம் அடைந்துள்ள அளவை எடை போட வேண்டுமாயின் நாம் அந்தச் சமூகத்தில் உள்ள சிறைச்சாலைகளைப் பார்க்க வேண்டுமென்று அவர் இந்தப் புத்தகத்தின் முகவுரையில் எழுதியிருக்கிறார்.

இந்தப் பேராசிரியரின் கூற்று, நூற்றுக்கு நூறு சத வீதம் சரியானது. ஒரு சமூகம் தங்கள் நாட்டில் உள்ள சிறைக் கைதிகளை அனுதாபத்துடனும், அன்புடனும் பராமரிக்கா விட்டால் அந்த சமூகத்தை ஒரு நாகரீகமடைந்த சமூகம் என்று அழைக்க முடியாது. எனவே, ஒரு சமூகம் தங்கள் நாட்டில் உள்ள சிறைக்கைதிகளின் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு ஏற்புடைய வகையிலேயே சிறைத்தண்டனையை விதிப்பதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

ஒரு கைதி சிறையில் இருக்கும் போது அவன் நிம்மதியாக வாழ்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும். எனவே, சிறை அதிகாரிகள் கண்டிப்பாக, சட்டப்படி சிறை விதிகளைக் கடைப்பிடித்தாலும் சிறைக் கைதிகள் எவ்விதத்திலும் துன்பமடைவதில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நூலாசிரியர் கூறுகிறார். இந்த நூலை வாசித்த பின்னர் நான் ஒரு தடவை இலங்கையில் உள்ள சகல சிறைச்சாலைகளையும் சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வெலிக்கடை சிறைச்சாலைக்கும் மஹரா, போகம்பர, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு, அநுராதபுரம் சிறைச்சாலைக்கும் சென்றேன். அங்கு நான் சிறைக்கைதிகளுடன் எவ்வித கட்டுப்பாடுமின்றி உரையாடுவதற்கும் சிறை அதிகாரிகள் இடமளித்தனர்.

இந்தச் சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளுக்குள்ளும் செல்வந்தர்கள், பணபலம் படைத்தவர்கள், அரசியல் செல்வாக்கு கொண்ட பல பிரிவுகள் இருக்கின்றன. செல்வந்தர்கள் கழிவறைக்கு செல்வதற்கு முன்னர் சாதாரண சிறைக் கைதிகள் அவர்களிடம் இருந்து ஏதாவது சலுகைகளைப் பெற முடியும் என்ற எண்ணத்துடன் கழிவறைகளை சுத்தம் செய்து கொடுப்பதை நான் அவதானித்தேன். பின்னர் ஸ்நானம் செய்வதற்கும் அவர்களுக்கு, முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்த செல்வந்த சிறைக்கைதிகளின் ஆடைகளையும் இந்த சாதாரண சிறைக்கைதிகளோ கழுவிக் கொடுக்கின்றனர். இவற்றை அவதானித்த பின்னர் நான் சிறை அதிகாரிகளிடம் சென்று சிறைக் கைதிகள் மற்றவர்களை நன்றாக பராமரிக்கிறார்களே என்று கேட்டேன். அதற்கு அவர், "இவற்றை எல்லாம் அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக என்று பதில் கொடுத்த போது நான் வாயடைத்து போனேன், தங்களுக்கு இவ்விதம் பணிவிடை செய்யும் சிறை கைதிகளுக்கு செல்வந்த கைதிகள் நாளாந்த உணவு பொட்டலங்களை கொண்டு சென்று கொடுப்பதும், ஒரு சிகரட் பெக்கட்டை வாரம் ஒரு தடவை இந்த செல்வந்த கைதிகள் வழங்குவதும், இரகசியமாக மதுபானம் அருந்தும்போது அவர்களுக்கும் கொடுக்கின்றார்கள் என்றும் கூறினார்.

இதனை அவதானித்த நான், சிறையிலும் ஏழை, பணக்காரர் என்ற பிரிவினை இருப்பதை அவதானித்து மனம் நொந்த படி எனது கூட்டை நோக்கி நகர்ந்தேன்.



# இன ஐக்கியத்தால் இலங்கையை கட்டி எழுப்புவோம்



"பல்லின மக்கள் வாழும் இலங்கையில் ஒற்றுமையைப் பேணி மக்களின் வாழ்வை நல்ல வழிப்படுத்த நாட்டிலுள்ள தீமைகளை களைந்து கொள்ள வேண்டியதும் ஒரு பாரிய பொறுப்பாகும். தாய் நாட்டிற்கு சேவை செய்வதாக கூறிக்கொள்ளும் சிலர் பொருளாதார நிலையிலிருந்து நோக்கும் போது ஊழலுக்கு வீணான செலவுக்கும் மிக எளிதாக இரையாகும் அவர்கள் தாய் நாட்டிற்குத் துன்பம் விளைவிக்கிறார்கள்."

நீலத்திரை கடல் நடுவே முத்தாய் நிமிர்ந்து நின்று இந்து சமுத்திரத்தின் நித்திலம் என வர்ணிக்கப்படும் இலங்கை எம் தாய் மணித்திருநாடு. இயற்கை அன்னை வஞ்சமில்லாதுநன் எழிற் கரங்களை அள்ளிப் பரப்பித் திளைத்திருக்கும் அழகெழில் வளநாடு. கரையோரத்தில் இருந்து படிப்படியாக அதிகரித்துச் செல்லும் உயரத்தால் மத்தியில் உயர்ந்து ஓங்கிநிற்கும் மலைநாடு. கரையோரங்களில் அலைகடலின் அசைவும் மலைநாட்டில் குளிர்மை கொஞ்சும் சீதனமும் இடையே நிறைந்த மண்வளமும் அழகிய குளங்களையும் கொண்ட அற்புதத் தீவு. இந்த அழகான வளமான மண்ணின் மைந்தர்களாய் பிறந்தமையை இட்டு நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ள வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகளான எம்மிடையே பெரும்பான்மை, சிறுபான்மை எனப் பிளவுபட்டு இதுவரை காலமாக இருந்து வந்த யுத்தம் தணித்து மக்கள் முகங்களில் புதுமலர்ச்சி புகுந்து கொண்டுள்ள இவ்வேளையில் பன்மைத்துவத்திற்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம் ஆசியாக் கண்டத்தில் மட்டுமல்ல இந்த அகிலத்திலேயே முதன்மையான ஒரு நாடாக எமது தாய்த்திருநாட்டை விளங்கச் செய்யலாம் என்பதில் ஐயமில்லை.

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"**

என குன்றாத விளைபொருளும் தக்க பெரியோரும் கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்குப் பெரிதும் ஒப்பான நாடாக நம் நாடு விளங்கியது. அதனாலன்றோ காலத்திற்குக் காலம் அந்நியரின் ஆட்சிக்கு அகப்பட்டுப் பல்வேறு அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் தன் வரலாற்றில் இணைத்துக் கொண்டது.

சுதந்திரமும் தன்னாதிக்கமும் பெற்ற குடியரசு நாடாகிய இலங்கை இன்று பாராளுமன்ற முறை சார்ந்த ஜனாதிபதி ஆட்சியை அனுபவித்து வருகின்றது. எழுதப்பட்ட அரசியல் யாப்பையும் அதன் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறைக்கேற்ற அங்கங்களையும் பெற்றிருக்கும் இந்த ஆட்சியில் முழுமையான அரசியல் அதிகாரம் மக்களிடமே ஒப்படைக்கப்பட்டுள் ளது. ஆனால் இந்த அதிகாரத்தினை 1948ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கையர் பெற்றிருக்கவில்லை. சுமார் ஐநூறு வருடகாலமாக இலங்கை அந்நியரின் ஆட்சியின் கீழ் கட்டுண்டிருந்தது. முதலில் போர்த்துக்கேயரும் பின்னர் டச்சுக்காரரும் இறுதியாக பிரித்தானியரும் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டனர். போர்த்துக்கேயரோ, டச்சுக்காரரோ இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்குள் கொண்டு வரமுடியவில்லை. பிரித்தானியரே அதில் வெற்றி கண்டனர்.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திர நாடாகியது. இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் பலர். அவர்களில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் என அனைத்து இனப் பெரியார்களினதும் அயராத உழைப்பினாலேயே நம் நாட்டின் இறைமை பேணப்பட்டு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அக்காலப்பகுதியில் இன, மத பேதம் ஏதுமின்றி ஒற்றுமையாகவே அனைவரும் பாடுபட்டமையைக் குறிப்பிடலாம். எனவே ஓரினமக்கள் மட்டும் பாடுபடாமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்ட பெருமையை இன்று நாம் மீளவும் நினைவு கூர்ந்து கொள்ள வேண்டும். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. ஒற்றுமையே உயர்வு தரும், ஒற்றுமையே பலம்" எனும் ஆன்றோர் வாக்கை நன்குணர்ந்து கொண்டால் நம்நாட்டில் வேற்றுமை தோன்ற வாய்ப்பே இல்லை எனலாம்.


போட்டி முறையில் அமைத்து, அரசியல் வழிமுறைகளோடு கூடி, நன்றாகவே வேரூன்றி வளர்ச்சி கண்டவை இந்நாட்டின் சனநாயக ஸ்தாபனங்கள் அதன் காரணமாக புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகளுள் அரசியல் திட்ட வளர்ச்சியினைப் பொறுத்து இலங்கை ஒரு முன்மாதிரியானதாகக் காணப்பட்டது. காலத்திற்கு காலம் சுதந்திரமான சனநாயக முறையில் அமைந்த தேர்தல்களினூடாக ஆட்சி கைமாற்றப்பட்டிருக்கின்றது. பொருத்தமான காலகட்டத்தில் எழுச்சியடைந்து போட்டி முறையிலமைந்த அரசியல் கட்சிகளும் நாட்டில் அரசியல் நிர்வாக முறைக்கு உறுதியையும் தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளன. அண்மைக் காலமாக இடம்பெற்ற சில சம்பவங்கள் இந்நாட்டின் ஒரு குடையின் கீழ் ஒற்றுமைப்படுத்த குழப்பங்களாக அமைந்தன. 1956, 1958, 1977, 1981, 1983 ஆகிய காலங்களில் உருவான இனக்கலவரங்கள் இந்நாட்டின் பிரதான இரண்டு இனமக்களிடையே வேற்றுமை வளர அத்திவாரமிட்டன. மேலும் 1971, 1986-87 ஆம் ஆண்டுகளில் உருவான சனநாயக முறைக்கெதிரான இளைஞர்களின் பயங்கரவாத நடவடிக்கைகள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்று தன்மையாய் அமைந்து இனங்களிடையே வேற்றுமை பரவக் களமாய் அமைந்தன. எது எவ்வாறிருந்தாலும் இழப்புகள், அர்ப்பணிப்புகள் மத்தியில் இன்று நம் நாடு மீளவும் ஒற்றுமை எனும் ஒரு குடையின்கீழ் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கை ஒரு பல இன சமூகத்தினையுடைய நாடாகும். இச்சமூகத்தின் பெரும்பான்மையானோர் சிங்கள மக்களாவர் வாழும் பிரதேசத்தைக் கொண்டும் செய்யுந் தொழிலை அடிப்படையாகக் கொண்டும் சிங்களவர் மேலைத்தேய ஆட்சியின் போது இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவை முறையே கரைநாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் எனப்பட்டனர். இலங்கையின் அடுத்த பிரதான சிறுபான்மையோர் இலங்கைத் தமிழர்கள் ஆவர். மேலும் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக இன்னொரு தமிழர் குழு தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்த சேர்ந்து மத்திய மலைநாட்டுப் பகுதியில் வாழ்கின்றனர்.





அடுத்துள்ள முக்கியமான சிறுபான்மை இனக்குழு முஸ்லீம்களாவர். இவர்கள் இலங்கை முஸ்லீம், இந்திய முஸ்லீம், மலேய் முஸ்லீம்




எண்ணப்பாகுபாடுகின்றனர். பறங்கியர் எனப்படும் இன்னொரு சிறிய சமுதாயத்தினரும் இலங்கையில் உள்ளனர். இவர்கள் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் மற்றும் ஐரோப்பிய இனங்கள் இலங்கையர்களோடு ஏற்பட்ட கலப்பு திருமணங்களின் பயனாகத் தோன்றிய ஒரு இனத்தவர் ஆவர்.

இலங்கையில் வாழும் இனத்தவர்களில் பல்வகைத் தன்மை காணப்படுவது போலவே இலங்கை மக்களின் மதங்களும் பல்வகைத் தன்மையைக் கொண்டிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. மஞ்சரி ஒன்றில் பல்வேறு வகைப் பூக்கள் இடம்பெற்றாலும் அவை மலர்கள் என்ற ஒருமைப்பாட்டில் இணைவது போல நாம் அனைவரும் இலங்கை அன்னையின் மக்கள் என்ற தன்மையில் ஒன்றித்து இருப்பதில் பெருமை கொள்வோம்.

| | |
|---|---|
| **பௌத்தர்கள்** | **- 69.3%** |
| **இந்துக்கள்** | **- 15.5%** |
| **முஸ்லீம்கள்** | **- 7.5%** |
| **ரோமன் கத்தோலிக்கர்** | **- 6.9%** |
| **கிறிஸ்தவர்கள்** | **- 0.7%** |
| **மற்றையோர்** | **- 0.1%** |

இவ்வாறு இலங்கை தனியே ஒரு பல்இன சமூகத்தை மாத்திரமல்ல ஒரு பல் சமய சமூகத்தையும் கொண்டிருக்கின்றது. ஆகவே பல கிளைகளாகப் பிரிந்த போதும் அது ஓர் மரத்தின் அங்கங்களே என்றவகையில் நான் அனைவரும் ஒன்றிணைந்து கொள்கின்றோம். நம்மவரிடையே ஒற்றுமையை உருவாக்கிப் புதியதோர் தேசத்தை நிர்மாணிப்போம்.

**"பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்"**

என்ற வள்ளுவர் வாக்கு, பண்புடையாரிடம் சேர்ந்து வாழ்தலால் உலகம் நிலை பெற்றுள்ளதாக இருக்கின்றது. இல்லையேல் அது மாய்ந்துவிடும் என்கின்றார். மனிதராகப் பிறந்த நாம் அனைவரும் ஒருவருடன் ஒருவர் இன, மத மொழி வேற்றுமை பாராது பண்புடன் வாழ்ந்து நம் தேசத்தை மாளாது பேண வேண்டும்.

**வளம் பல கொண்ட நலமான நம்நாடு**
**தனம் சேர்க்கத்தரணியில் தாயான நாடு**
**இனம் பல சேர்ந்தே இன்னல்கள் தீர்த்து**
**மனம் ஒன்றுபட்டும் மகத்தான வாழ்வுபெற**
**சிங்களவர் தமிழர் சீருடன் இணைந்து**
**சிக்கல்கள் இன்றி சீர் பெருவாழ்வு பெற**
**மலாயர் முஸ்லீம் மாண்புடன் வாழ**
**மகத்தான பூமி நம் மண்ணில் மலர**
**ஒற்றுமைக் கரங்களை ஒன்றாக இணைத்து**
**ஒன்றாய் வாழ்வோம் ஓர் திருநாட்டில்.**

வெவ்வேறு திறமைகளைக் கொண்டுள்ள தனிநபர் பல பேரைக் கொண்டதாக சமூகம் அமைகிறது. பல சமூகங்களைக் கொண்டதாக நாடு அமைகிறது. சிதறியுள்ள திறமைகள் ஒருவரிடமிருந்த மற்றையவரைச் சென்றடையும் பாலமாக இருப்பதே சமூக உறவுகள். தனிநபர் ஒருவராலேயே எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடிவதில்லை. தனித்திருந்து செய்யப்படும் காரியங்களுக்கு செலவிடும் திறனும் அதிகமாகவே இருக்கும் கூடிச் செய்யும் போது வேலையின் பளுவும் குறைந்து திறனும் அதிகரிக்கும் வாய்ப்பாகவே அமைந்து விடும். ஒருங்கிணைப்புடன் ஒற்றுமையாக கூடிச் செய்வது என்பது இன்றியமையாதது. கல்வி நிறுவனங்கள் முதல் வேலை நிறுவனங்கள் வரை பல திறமைகள் ஒன்றுகூடி வெவ்வேறான பணிகள் செய்து ஏற்படும் பிணைப்பு சமூகப் பிணைப்பாக மாறி நாட்டின் ஒற்றுமைப்பிணைப்பாக மாற முடியும்.

இன அடிப்படையில் தோன்றும் உணர்வு மற்றும் பாரம்பரியத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிப்பதாக இருப்பதால் ஒரு இனத்திலேயே பிரிவுகள் பல தோன்யி பல சமயங்களில் கைகலப்பில் முடிகின்றது. பிறப்பில் அண்ணன் தம்பியாக பிறந்து வளர்ந்த பின் பங்காளிக-ளாக மாறிவிடுவதால் தான் பல இடங்களில் சண்டையும் சச்சரவினையும் காண்கிறோம். இன அடிப்படையில் தோன்றும் உறவு பொதுவான சூழல் பொதுவான நடத்தை இவற்றிற்குத் தான் முக்கியத்துவம் அளிக்கிறது. அதுவே புரிதல் அடிப்படையில் தோன்றும் உறவுகள் ஒன்றை ஒன்று அனுசரித்துப் போகும் நிலையின் மீது எழுவதால் அங்கு பிரச்சினைகள் எழும் வாய்ப்பு அரிதாகிறது.

இன அடிப்படையிலும் இல்லாமல் ஒத்துப் போகும் அடிப்படையும் இல்லாமல் வெளிப்படையான மனத்துடன் செயல்படும் உறவுகளில் யாரும் எப்பொழுதும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதான சூழல் நிலவும், அப்பொழுது தோன்றும் உறவுகள் பரஸ்பர ஒற்றுமைக்கு வழி வகுக்கின்றது. கருத்துப் பரிமாற்றமும் சிறந்திருக்கும். கருத்துக்களும் மரியாதையுடனேயே வரவேற்கப்படும்.


2001 ஆண்டு தரவுகளின் படி

| | தலாவருமானம் டொலர் | இறப்பு வீதம் | பிறப்பு வீதம் | வாழ்க்கை எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 1890 | 10 | 40 | 60.4 |
| இலங்கை | 3180 | 06 | 21 | 72.3 |
| நோர்வே | 29620 | 10 | 14 | 78.7 |

பெரியவன்- சிறியவன் என்ற நினைப்போ உயர்வு-தாழ்வு என்ற நிலையோ அங்கு எப்பொழுதும் இருப்பதில்லை. அவ்வாறு ஒன்றுபட்டு செயல்பட்டால் மனித உறவு பலப்படும். அதுவே சிறப்பான சமூக உறவாக இருக்க முடியும். அப்பொழுது வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள உறவும் மிகவும் குறுகிவிடும்.

உலக நாடுகளை அபிவிருத்தி அடைந்த நாடுகள் எனவும் குறைவிருத்திப் போக்கினைக் கொண்ட நாடுகள் எனவும் வரையறை செய்யலாம். மூன்றாவது மண்டல நாடுகளெனவும் அழைக்கப்படும் கிழக்காசிய ஆபிரிக்க நாடுகள் குறைவிருத்தி நாடுகள் அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையும் மூன்றாவது மண்டல நாடுகளில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிபுணர்களின் கருத்துப்படி ஒரு நாடு முழுமையான உற்பத்தியில் உண்மையான உற்பத்தியை அடையாமையும் அவ்வாறு அடைவதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் மிகவும் பின் தங்கியுள்ளமை கொண்டும் அந்நாட்டின் பொருளாதாரத்தை குறைவிருத்திப் பொருளாதாரம் என வரையறை செய்யலவாம்.

மக்களுக்கு கிடைக்க வேண்டியவை உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றால் ஒற்றுமை குழம்புவதற்கு ஏது இல்லை. எனவே எமது நாட்டை பொருளாதார ரீதியாக வளப்படுத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு அனைவரது கைகளுக்கும்ஒப்படைக்கப்பட்டுள்ள பெரம் பணியாகும். இலங்கை விவசாயத்துறையில் ஓரளவு முன்னேறி காசிம்பாபாவும் சிசில் பண்டாவும் கூட்டுத் தொழில் ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு இனத்தவருடைய சிறப்புத் தேர்ச்சியை மற்றையவர்




அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இலங்கை மாதாவின் மைந்தர்கள் இணைந்து உழைத்து நின்றால் அபிவிருத்திப் பாதையில் நாமும் நடைபயிலலாம்.

மேற்படி அட்டவணையில் ஒரு அபிவிருத்தி அடைந்த நாடுட்டுடன் அபிவிருத்தி அடையாத நாட்டுடன் இலங்கையின் நிலையை ஒப்பிடும் நோக்கும் போது ஏனைய சுட்டிகள் இலங்கையை ஓர் அபிவிருத்தி அடைந்த நிலைக்கு இட்டுச் சென்றாலும் பொருளாதார நிலைமையே மோசமான நிலையில் காணப்படுவதை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. எனவே நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நிச்சயம் சரிந்து நிற்கும் பொருளாதாரத்தை நிமிரச் செய்து, உயர்த்தி இலங்கை நாட்டை உன்னத நிலைக்கு உயர்த்தலாம்.

அன்பிலே மனிதன் வாழும் போதே பண்படுகின்றான். எனவே அன்பு வழியானது சமூகம் வாழ்வுக்கு அடிப்படையானது அன்பு எமது தொழில், உடை, நடை இவற்றில் வீட்டுக்கு வீடு வித்தியாசம் வரலாம் ஆனால் அன்பில் வித்தியாசம் வராது. எனவே எல்லா இன மக்களுடனும் அன்பு பூண்டு வாழ்வதன் மூலம் ஒற்றுமையைப் பேண முடியும்.

மாலாதேவி மதிவதனன்
அளவெட்டி மத்தி, அளவெட்டி

# மோசடியில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை

## சுகாதார தொழிற் சங்கங்கள் வலியுறுத்தல்

மருந்து மற்றும் வேறு தேவையான பொருட்களை வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை கையாடியுள்ளதாக கூறப்படும், சுகாதாரத்துறையில் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதாரத்துறை தொழிற் சங்கங்கள் கோரியுள்ளன.

ஊழலில் தொடர்பானவர்கள் என ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் இனங்காணப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தவறியுள்ளதென சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் கூறியுள்ளதாவது,

ஊழலில் சம்பந்தப்பட்டவர்களென விசாரணைகளில் இனங்காணப்பட்டவர்கள் பலர் விரைவில் ஓய்வு பெறவுள்ளனர். ஆனால், இவர்களுக்கு தண்டனை வழங்கப்படவில்லை. மருந்து தட்டுப்பாடு மட்டும் பிரச்சினை அல்ல, வைத்தியசாலைகளுக்கு தரம் குறைந்த மருந்துகள் வழங்கப்பட்டமையும் பெரும் பிரச்சினையாகும்.குறைந்த பாவனைக்காலம் கொண்ட மருந்துகளை வாங்கியதால் அவை அழிக்கப்பட்டன. சில வேளைகளில் பாவனைக் காலம் முடிவடைந்த பின்னர் அவை நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.சுகாதார துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமல் உள்ளது. அத்துடன் ஒதுக்கப்பட்ட நிதியும் தவறாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுகாதாரத்துறை பெரும் கஷ்டத்தை எதிர்நோக் கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## நினைவுப் பேருரை

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்முன்னாள் புகழ் பூத்த அதிபர் வை.சிவசுப்பிரமணியத்தின் 16 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் கல்லூரியின்பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நினைவுப் பேருரையின் தொடக்கவுரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜியும், நினைவுப் பேருரையை பேராசிரியர் எஸ்.கே. சிற்றம்பலமும், நிறைவுரையை வைத்தியகலாநிதி எஸ்.சிவானந்தராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் பூஜை

(மாவிட்டபுரம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆடிச்செவ்வாய் பூசை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. விரத தினங்களில் விசேட தினமாக பெண்களால் அனுஷ்டிக்கப்படும் ஆடிச்செவ்வாய் விரத தினத்தின் இரண்டாம் ஆடிச்செவ்வாய் விரத தினம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

இவ்விசேட உற்சவதினத்தில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டு தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினார்கள். விசேட பூஜையாக மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று துர்க்கை அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இம்பெற்றது.

## இஸட் புள்ளியை இரத்துச் செய்யுமாறு கோரி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கல்விப் பொதுதராதர உயர்தர பெறுபேற்றின் இஸட் புள்ளியை இரத்துச் செய்யுமாறு உயர்தர மாணவர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட உயர்தர பெறுபேற்றில் சிக்கல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் உயர்தர பெறுபேற்றிலும், இஸட் புள்ளிகளின் நம்பகத் தன்மையினாலும் குழப்பமடைந்துள்ளனர்.

இதனால் அண்மையில் வெளியிடப்பட்ட இஸட் புள்ளிகளினால் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதில் சிக்கல்கள் காணப்படும் நிலையில் பழைய பாடத்திட்ட இஸட் வெட்டுப் புள்ளியை இரத்துச் செய்யுமாறு கோரி பல மாணவர்கள் தகமை சான்றிதழ்கள் சகிதம் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள சோலைநகர் கிராமத்தில் அவுஸ்ரேலிய அரசின் உதவியுடன் சிறுவர் நிதியம் நிறுவனதினால் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியில் உணவு பதனிடல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்திலுள்ள பல பெண்களின் வாழ்வாதாரத்தை நோக்காக கொண்டு நேற்று இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், மாவட்டச்செயலக உதவி திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் இராமச்சந்திரன், சிறுவர் நிதியம் நிறுவன பிராந்திய முகாமையாளர் மதிவண்ணன், மக்கள் அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சேவை நலன் பாராட்டு விழா

(மாவிட்டபுரம்)

தீவக வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச்சென்ற கு.சரவணபவானந்தனுக்கான சேவை நலன் பாராட்டு விழா நாளை 27 ஆம் திகதி- வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு வேலனை சரஸ்வதிவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணை கோட்டப்பாட சாலை அதிபர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## முந்தைய இஸட்புள்ளி கணிப்பீட்டு முறை செல்லுபடியற்றது

### பேராசிரியர் தாட்டீல் கூறுகிறார்

பல்கலைக்கழக அனுமதிக்கான முந்தைய இஸட் புள்ளி முறைமை தற்போது செல்லுபடியாகாது எனவும் எனவே தற்போதைய இஸட் புள்ளி கணிப்பீட்டு முறைமையுடன் மாணவர்கள் ஒப்பிடக்கூடாது எனவும் பேராசிரியர் ஆர்.ஓ.தாட்டில் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான இஸட் புள்ளியை அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் தாட்டீல். இவர் தற்போதைய இஸட்புள்ளி கணிப்பீட்டு முறை மிகச் சரியானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருவேறான கணிப்பீட்டு முறைமைகளையும் ஒப்பிடுவது நல்லதல்ல.

முந்தைய கணிப்பீட்டு முறையானது செல்லுபடியற்றதென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## அளவெட்டி அருணோதயா மாணவி உமையாழினி முதலிடம்

(மாவிட்டபுரம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மாணவி தேவநேசன் உமையாழினி குறுநாடகப் பிரதியாக்கம் பிரிவு 4இல் முதலாம் இடத்தினை பெற்று சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டியில் குறுநாடக் பிரதியாக்கத்தில் வெற்றி பெற்ற உமையாழினி சென்ற ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழித் தினப்போட்டியில் தேசிய ரீதியில் கட்டுரையாக்கத்தில்பிரிவு 3 இல் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. தேசிய ரீதியில் முதலாம் இடத்தினை பெற்ற உமையாழினியை கல்லூரி சமூகத்தினரும் பழைய மாணவர்களும் பாராட்டியுள்ளனர்.

## மெமோறியல் மாணவன் சாதனை

(மாவிட்டபுரம்)

வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாகாண மட்ட தடகளப்போட்டியில் மாணிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவன் மைக்கல் ஜெனோசன் 100மீற்றர் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் முதலாம் இடத்தி பெற்று சாதனைபடைத்துள்ளார். வடமகாணப்படசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற போது மேற்படி சாதனைய படைத்தார். அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட தடகளப்போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

## யூனியன் மாணவி இரண்டாமிடம்

(அளவெட்டி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவி வெல்வி விஸ்வகே-துவராகா பாஃவோதல் பிரி வில் தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். இவர் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், என அனைத்து நிலைகளிலும் முதல் நிலையினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சாதனை குறித்து பாடசாலையில் ஆசிரியர்களும், மாணவர்களும் மாணவிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

# வானலை நாதம்

"பதினான்காம் அகவையில் தடம் பதிக்கும் வானலை முதல்வன் சூரியனுக்கு அன்று முதல் இன்றுவரை தங்களது முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கி, தமது சொந்தம் போல் சூரியன் வானலையுடன் இணைந்து உறவாடுகின்ற எமது சூரிய சொந்தங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# நேற்று 14 வருடங்களை நிறைவு செய்துகொண்ட சூரியன் எப்.எம்.

தலைநகரில் தலை நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் 35ஆவது மாடியில் 1998ஆம் ஆண்டு தமிழ்பேசும் நேயர்களுக்காக புதிய ஒலியாகப் புறப்பட்ட சூரியன் வானொலி அரிய பல சாதனைகளை வானலையில் நிகழ்த்தி புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கின்றான்" என தனது பிறந்தநாளையொட்டி தகவல் குறிப்பொன்றை வெளியிட்டு நேயர்களுடனான உறவை மேலும் பலப்படுத்துகிறது சூரியன் வானொலி சேவை.

1998 ஜூலை 25ஆம் திகதியன்று இலங்கையின் இரண்டாவது தனியார் தமிழ் வானொலியாக அறிமுகமானது சூரியன் எப்.எம். அதேவேளையில் முதலாவது 24 மணிநேர சேவை என்ற பெருமையையும் பெறுகிறது.

சூரியன் எப்.எம்.வானொலியின் தலைமைப் பொறுப்பதிகாரியாக எஸ்.நவநீதன் பணியாற்றுகிறார். ஒலி மற்றும் ஒளிபரப்பு துறைகளில் பலவருட அனுபவம் கொண்ட எஸ்.நடராஜசிவம் சிரேஷ்ட ஆலோசகராகவிருக்கிறார்.

நாளொன்றின் காலைப் பொழுதின் ஆரம்பத்திலே உறவுகளுக்கு வாழ்த்துக்கள் சொல்லி அன்றைய நாள் பற்றியும் அறிந்து கொள்வதோடு, மனதுக்கு இதயமான பாடல்களையும் தரும் 'அருணோதயம்' நிகழ்ச்சியுடன் சூரியன் எப்.எம். மலருகிறது.

காலை வேளையை உற்சாகப்படுத்தியும் தகவல்களை பரிமாறவும் 'பேப்பர் பொடியன்' வழங்கும் பத்திரிகைச் செய்திகள், 'யார் பேசுறீங்க', 'கள்ளமனத்தின் கோடியில்', 'கலக்கலா சல்சலா' போன்ற படைப்புகள் அடங்கலாக, பல இலட்சம் ரூபா பணப்பரிசுகளை அள்ளி வழங்கும் 'பிட் த பொம்' அம்சமும் காலை நிகழ்ச்சியை அலங்கரிக்கின்றன.

காலை 10.00 மணி முதல் 1.00 மணிவரை நகைச்சுவை அம்சங்கள் மற்றும் பாடல்கள் அடங்கிய 'இசைச்சமர்' என்ற கலகலப்பான நிகழ்ச்சியைத் தொடர்ந்து 3.00 மணி வரை மதிய போசனத்துடன் சந்தோஷமாக பாடல்களைக் கேட்டு களைப்பாறுவதற்கான 'மதிய நேர இசை விருந்து' ஒலிக்கிறது. தொடர்ந்து 5.00 மணிவரை புதிய தகவல்களுடன் பாடல்களை தரும் கும்மாளம் நிகழ்ச்சி நேயர்களுக்கு விருந்தளிக்கிறது.

5.00 மணிக்குப் பின்னர் மாலை வேளையை இனிமையாகக் கழிக்கவும், வேலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பும் போது உற்சாகமாக பாடல்களைக் கேட்டு வானலையில் உரையாடி வாழ்த்துக்களையும், பகிர்ந்து கொண்டு சிரித்துப் பேசும் வகையிலான என்றென்றும் புன்னகை ஒலிபரப்பாகிறது.

இரவுச் செய்தியறிக்கையைத் தொடர்ந்து காதல் உள்ளங்களின் காவிய கீதங்களை தந்து, தவிக்கும் இதயங்களின் இதயத் துடிப்பாக தாலாட்டுப் பாடுகிறது, நேற்றைய காற்று: இதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியிலிருந்து விடியவிடிய இரவுச் சூரியன் ஒலிக்கிறது. அதிகாலை 3.00 மணியிலிருந்து 5.00 மணிவரை 'ரீங்காரம்' நேயர்களுக்கு உற்சாகமூட்டி மகிழ்விக்கிறது.

வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்களிலும் சிறப்பான நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. டொப் 20, விளையாட்டுப் பிரியர்களுக்கான அட்டகாசம், உதயராகம், விடுமுறை டொட்கொம், சந்திப்போமா போன்றவைகளும் விருந்தளிக்கின்றன.

சூரியன் எப்.எம்.பல்சுவை நிகழ்ச்சிகள் மூலம் நேயர்களை மகிழ்வித்து வருவது போலவே, செய்திச் சேவை மூலம் உள்நாட்டு, சர்வதேச செய்திகளையெல்லாம் உடனுக்குடன் வழங்கிவருகிறது. நாளொன்றுக்கு நான்கு தடவைகள் பிரதான செய்திகளையும், மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை செய்திச் சுருக்கத்தையும், தினமும் இரவு 10.00 மணிக்கு உள்நாட்டு செய்தித் தொகுப்பொன்றையும் (சுருக்கம்) ஒலிபரப்பி வருகிறது.

இலங்கையில் இசைக்கான தேசிய விருதையும், 'இ-ஸ்வாபிமானி' என்ற விருதையும், இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேசம், நேபாளம் ஆகிய நாடுகளின் வானொலிகளுடன் போட்டியிட்டு தெற்காசியாவின் சிறந்த வானொலிக்கான "மன்தன்" விருதையும் பெற்றுக் கொண்டதன் மூலம் சர்வதேச, தேசிய ரீதியான விருதைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் ஒரே தமிழ் வானொலி என்ற பெருமையை சூரியன் எப்.எம். பெற்றுள்ளது.

ஒலிபரப்புச் சேவைக்கு மேலதிகமாக, மக்களுக்கும் பலவகையில் உதவி வந்துள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட பாரிய இலங்கை அனர்த்தங்களான சுனாமி, வெள்ளப்பெருக்கு, புயற்காற்று மற்றும் யுத்த சூழ்நிலைகளினால் ஏற்பட்ட இடப்பெயர்வு போன்ற வேளைகளில் நாட்டின் பல பகுதிகளுக்கும் மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கி வந்திருப்பதன் மூலம் சூரியன் எப்.எம். சமூக நலத்துறையிலும் ஆற்றிவரும் பணிகளையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

ஒலிபரப்புத் துறையின் வரலாற்றுப் பாதையில் பதினைந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் சூரியன் எப்.எம் நேயர்களது ரசனை அறிந்து இன்னும் பல வித்தியாசமான புதிய நிகழ்ச்சிகளை படைப்பதற்கு தயாராக இருப்பதாக பிறந்த நாளையொட்டி வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில் சூரியன் எப்.எம்.தெரிவித்துள்ளது.

- *அ.கனகசூரியர்.*

# யாழ் மாணவர்களின் வானொலி நாடகங்கள்

**இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்திய மாணவர்களுக்கான வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து, பயிற்சிபெற்ற மாணவர்களால் எழுதி நடிக்கப்பட்ட பத்து நாடகங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இது தொடர்பாக இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றப் பணிப்பாளர் எம்.சீ. ரஸ்மின் எழுதும் கட்டுரைத் தொடரின் நான்காவது பகுதி இது.**

மாணவர்கள் எழுதிய நாடகங்களை கொழும்பில் உள்ள கலையகங்களில் ஒலிப்பதிவு செய்வதே செயற்றிட்ட உத்தேசமாகும். கொழும்பில் உள்ள கலைஞர்களை அழைத்து வெளிக்கலையகம் ஒன்றில் நடிக்க வைப்பது செலவும் குறைவு. ஆனால், மாணவர்கள் நாடகங்களை எழுதியதுடன் மாத்திரமல்லாது அந்நாடகங்களில் அவர்களும் நடித்தல், தயாரித்தல், நெறியாழ்தல், ஒலிப்பதிவுசெய்தல் போன்றவற்றை நேரடியாகக் கண்காணிக்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென செயற்றிட்ட அதிகாரிகள் விரும்பினர். நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்பும் இதற்கு விருப்பம் தெரிவித்தனர். இதுவரை வானொலியில் நடித்திராத, நாடகமே எழுதியிராத இளவட்டங்களின் பிரதிகளில் நடிக்க யார் வருவார்? யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்களாவது தங்கியிருந்து, மாணவர்களை நடிப்பிற்கு பயிற்றுவித்து, அவர்கள் விடும் தவறுகளை திருத்திக்கொண்டு பொறுமையாக நடந்துக் கொள்ளக்கூடிய கலைஞர்கள் யார்? யாழ்.மத்திய கல்லூரியில் கலையகம் அமைப்பதற்காக பல அறைகள் இருந்தாலும் அதன் அமைவிடம் இடங்கொடுக்கவில்லை. எதிரில் மைதானம், வாகன நெரிசல், சிறந்த அறைகளைக் கொண்ட பாடசாலையில் நாடக ஒலிப்பதிவுக்கான கலையகம் அமைப்பது எவ்வாறு? மாணவர்கள் நடிக்கும் நாடகத்தை வானொலி நிலையங்கள் ஏற்றுக்கொள்வார்களா? இவையாவும் எதிரில் நின்ற கேள்விகள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் சேவை பணிப்பாளர் இராஜபுத்திரன் யோகராஜனுடன் பேசிய போது ஜீ.பி. வேதநாயகம் நாட்டுக்கு வந்துள்ளார், லூக்கஸ் திருச்செல்வம் இப்போது தேசிய சேவையில் நாடகம் தயாரிக்கின்றார் எனவே இருவருடனும் பேசிப்பாருங்கள் என்றார். மாணவர்கள் நடிக்கும் நாடகம், யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு, பன்மைத்துவம் தொடர்பான கதைகள் என்று சொன்ன மாத்திரத்தில் சுகயீனமுற்றிருந்த நிலையிலும் வர ஒப்புதல் வழங்கினார் ஜீ பீ. வேதநாயகம். லூக்கஸ் திருச்செல்வத்துடன் பேசியபோது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தான் நாடக ஒலிப்பதிவிற்கு தயாராகி விட்டதாகவும் கலைஞர்களுக்கு அறிவித்துவிட்டதாகவும் குறிப்பிட்டார். பின்னர் அவரின் பணிகளை யோகராஜன் மனமுவர்ந்து ஏற்றுக்கொண்ட போது லூக்கஸும் தயாராகி விட்டார். இப்போது பெரியதொரு பிரச்சனை முடிந்தது.

இதுவரை நாடக ஒலிப்பதிவு வெளிக்கலையத்தில் நடந்ததில்லை. சுமார் இருபது மாணவக் கலைஞர்களும் மூன்று மூத்த கலைஞர்களும் பங்குகொள்ளும் ஓரளவுக்குப் பிரமாண்டமான ஒலிப்பதிகள் செப்பனிடப்படான கலையகத்திலன்றி நடிக்கப்பட்டதும் இல்லை. மாணவர்களும் மூத்த கலைஞர்களும் சேர்ந்து நடித்ததும் இல்லை. பன்மைத்துவ விழுமியங்கள் தொடர்பாக இத்தகைய முறையில் பிரதிகள் எழுதப்பட்டதும் இல்லை. இந்த ஒலிப்பதிவு எல்லா வகையிலும் சவால் நிறைந்தது. கலையத்திற்கும் தேவையான அனைத்து கருவிகளையும் எடுத்துக்கொண்டு யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்றபோது வெளிச்சத்தங்கள் புகாத ஒரேயொரு அறை மாத்திரம்தான் அங்கு இருந்தது. அது கணணியறை. அதைக் கேட்டவுடன் அதிபரும், பிரதி அதிபரும் சாவியை எங்களிடம் தந்தனர். சுமார் முப்பது நாற்பது இலட்சம் பெறுமதிவாய்ந்த கணணி உபகரணங்கள் இருந்த குளிரூட்டப்பட்ட அறையை மனமுவர்ந்து அவர்கள் தந்தனர். ஆனால், அதில் ஒலிப்பதிவை மேற்கொள்ள முடியவில்லை. காரணம் அந்த அறையில் ஏற்படும் அதிக எதிரொலி ஆகும்.

பாடசாலை வரலாற்றில் மாணவர்களைத் தேடிவந்த இத்தகைய வாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் மாணவர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களா எஸ். ரீ. திருக்குமரன், எஸ். ரீ. அருள்குமரன் மற்றும் சீ. நிதர்ஷன் ஆகியோரை தொற்றிக் கொண் டது. எப்படியாவது நாடகத்தை ஒலிப்பதிவு செய்யுங்கள் என மாணவர்களும் கேட்டு நின்றனர். அப்போது வகுப்பு நடந்துகொண்டிருந்த மற்றுமொரு அறையை அதிபரும், பிரதியதிபரும் வழங்கினர். அதில் குளிரூட்டி இருக்கவில்லை. வெளிச்சத்தம் இலகுவாக உள்வரும். மின்விசிறி இல்லாமல் ஓரிரண்டு நிமிடங்கள் கூட இருக்க முடியாது. ஆனால் ஏனைய விதத்தில் வேறு பிரச்சனைகள் இல்லை. உடனே ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து காற்றுப்புகும் இடைவெளிகளை அடைத்து கலையகத்தை அமைத்தனர். ஆனால், போன் போட்டுக்கொண்டு ஒலிப்பதிவு செய்ய முடியாது. மின்விசிறி இல்லாமல் இரண்டு நிமிடத்திற்கு மேல் அதற்குள் நிற்க முடியாது. சூடு அதிகமாகி வியர்வை சிந்தத் தொடங்கிவிடும். லூக்கஸும், வேதநாயகமும் இதனையும் பொருட்படுத்துவார்களா? மாணவர்கள் இதற்குள் சமாளித்துக்கொள்வார்களா? ஒலிப்திவு மற்றும் ஒருங்கிணைப்பில் ஈடுபடும் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்ற உத்தியோகத்தர்களும் இத்தகைய ஒரு சூழ்நிலைக்கு முகங்கொடுப்பார்களா? ஏனெனில் ஒலிப்பதிவு தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு இடம்பெறும். அதில் ஓய்வெடுக்கும் அவகாசமும் இருக்காது.

"நாங்கள் இங்கே வந்தது மாணவர்களுக்காக. நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக. நீங்கள் தேர்ந்தெடுத்த தலைப்புக்காக. தியாகத்துடன் ஒலிப்பதிவை நடத்துவோம்" என வேதநாயகம் சொன்னபோது பெருமனதோடு லூக்கஸும் அதனை ஏற்றுக்கொண்டார். மாணவர்கள் தமக்கு நடிக்கக் கிடைத்தால் சரி எதையும் பொருட்படுத்த மாட்டோம் என்ற நிலையில் இருந்தனர். ஒலிப்பதிவு ஆரம்பமானது. மாணவர்களும், ஏனையோரும் வியர்வை சிந்தி பிரதியில் வழிந்தோடிய நிலையில், சற்றும் ஓய்வே இல்லாமல் ஒலிப்பதிவு நடந்து முடிந்தது. மாணவர்களுக்குள் இருந்த நடிப்புத்திறன் வேதநாயகத்தையும், லூக்கஸையும் வியக்க வைத்தது. முதல் நாளிரவு பன்னிரண்டு மணிவரை இவர்கள் இருவரும் மாணவர்களின் திறமையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

மாடியையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கி வந்து கொண்டிருக்கும்போது மாலியைக் காணோமென்பது அவர்களுக்குத் தெரிந்தது. திரும்பிப்போய்ப் பார்க்கும்போது மாலி எசமானியம்மாவின் சிறந்த படுக்கையறையில் தங்கி விட்டாள் என்பது தெரியவந்தது.

மிஸ்லிஸ் ஜோன்ஸினுடைய உடுப்பு மேஜையிலிருந்து ஒரு நீல ரிப்பனை எடுத்துத் தன் தோள் மேல் போட்டுக் கொண்டு தன் அழகை நிலைக் கண்ணாடியில் பார்த்து அது பல்லையிளித்துக் கொண்டிருந்தது அசட்டுத்தனமாக இருந்தது. மற்ற மிருகங்கள் மாலியைத் திட்டி அதற்குப் புத்தி புகட்ட முயன்றன.

சமையலறையில் உத்தரங்களிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த இறைச்சித் துண்டங்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டுபோய் வெளியே புதைத்துவிட்டன. பீர் பீப்பாயை ஒரு உதை உதைத்து பாக்ஸர் ஓட்டை பண்ணிவிட்டது. பீர் பூராவும் தரையில் கொட்டி சாக்கடை வழியாக ஓடிவிட்டது.

மற்றப்படி அந்தப் பண்ணை வீட்டில்




அந்த மிருகங்கள் எதையும் தொடவில்லை. அந்த இடத்திலேயே அந்தப் பண்ணை வீட்டை ஒரு காட்சிச்சாலையாக வைத்துக் காப்பாற்றுவது என்று விலங்குகள் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிவைத்தன. ஆனால் உள்ளே போய் மிருகங்களில் எதுவும் குடியேறக்கூடாது என்றும் ஏகமனதாக தீர்மானம் செய்து நிறைவேற்றின.

காலை உணவெல் லாம் ஆன பிறகு ஸ்நோபாலும் நெப்போலியனும் எல்லா மிருகங்களையும் மீண்டும் ஒன்றாகக் கூட்டின. ஸ்நோபால் பேசிற்று.

தோழர்களே! இப்போது மணி ஆறரை. பகற்பொழுது கழிவதற்கு இன்னும் எவ்வளவோ நேரம் இருக்கிறது. புல் அறுவடை செய்து சேமித்து வைக்கிற காரியத்தை இன்று நாம் தொடங்கி விடுவோம். ஆனால் அதைத் தொடங்கு முன் அவசரமாகச் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது.


இப்பொழுது தான் பன்றிகள் முதல் தடவையாகத் தங்கள் ரகசியத்தை வெளியிட்டன. சென்ற மூன்று மாதங்களாக அவை தாங்களாகவே ஒரு பழைய பாடப் புத்தகத்தை வைத்துக்கொண்டு எழுதப் படிக்க கற்றுக்கொண்டிருந்தன. அந்தப் பழைய பாடப் புத்தகம் மிஸ்டர் ஜோன்ஸின் குழந்தைகளுடையது. அதைக் குப்பை மேட்டில் கண்டெடுத்து அந்தப் பன்றிகள் அதிலிருந்து பாடங்களைப் படித்துக் கொண்டன.

நெப்போலியன் கறுப்பு, வெள்ளை வர்ணங்கள் கரைத்து வைத்திருந்த சட்டிகளைக் கொண்டுவரச் சொல்லிற்று. எல்லா மிருகங்களுமாக வெளி வாசல் வரையில் சேர்ந்தே போயின.

ஸ்நோபாலுக்குத் தான் எழுதுவதில் அதிகத் தேர்ச்சி இருந்தது என்று தெரியவந்தது. அது தன் முன்னங்கால்களால் ஒரு வர்ண பிரஷைப் பிடித்துக்கொண்டு கேட்டின் மேல் எழுதியிருந்த பெரிய (மேனர்) பண்ணை என்பதை அழித்துவிட்டு, அதிருந்த இடத்தில் "விலங்குகள் பண்ணை" என்று எழுதியது. இப்பொழுது முதல் அந்தப் பண்ணைக்கு அதுதான் பெயர்.

(நாளை...)


## வரைவோம் வாருங்கள்!



ஒருபோதும் நான் தவறு செய்ததில்லை என்று நீ சொல்வா யாயின், ஒருபோதுமே ஒன்றையும் செய்ய முயறசிக்கவில்லை என்றே சொல்வேன். - ஒரு அறிஞர்

## சிறுவர் அமுதம்

## ஆட்டுக்குட்டி



துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
தாவி வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?
கள்ளம் இல்லை உன் மனதில்
கபடம் இல்லை உன்னிடத்தில்
பள்ளம் மேடு வந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி
தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வருமே ஆட்டுக்குட்டி

$1 \times 9 + 2 = 11$
$12 \times 9 + 3 = 111$
$123 \times 9 + 4 = 1111$
$1234 \times 9 + 5 = 11111$
$12345 \times 9 + 6 = 111111$
$123456 \times 9 + 7 = 1111111$
$1234567 \times 9 + 8 = 11111111$
$12345678 \times 9 + 9 = 111111111$
$123456789 \times 9 + 10 = 1111111111$

## விடுகதைகள்




1. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, தொட்டு விட்டால் பார்க்க முடியாது அது என்ன?
2. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
3. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான் அவன் யார்?
4. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
5. நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

விடைகள்
1.நீர்க்குமிழி
2.விரல்கள் 3.பம்பரம்
4.கிளி 5.பூனை

## சிங்கம்



சிங்கம் காட்டின் ராஜா என்று சொல்லப்படும் பூனை இனத்தை சேர்ந்த விலங்கினம், காட்டு எருமை, வரிக்குதிரை சில பறவைகளையும் வேட்டையாடி சாப்பிடும். பகல் முழுவதும் தூங்கி இரவு முழுதும் வேட்டை ஆடும். வேட்டையாடி இந்த மிருகம் அழிக்கப்பட்டு வருகிறது.

சிங்கங்கள் பாலூட்டி வகையைச் சேர்ந்தவை. ஆண் சிங்கங்கள் பெண் சிங்கக் குட்டிகளை கொன்று விடும், சிங்கக் குட்டிகள் பற்கள் முளைக்கும் பருவத்தில் ஏற்படும் பல்வலியின் காரணமாகவும் இறந்து விடும். மிருகங்களில்

சிங்கத்திற்கு விரோதி மிருகம் கிடையாது. சிங்கத்திற்கு விரோதிகள் மனிதர்கள்தான், ஏனென்றால் சிங்கத்தை வேட்டையாடி அழிப்பவர்கள் மனிதர்கள் மட்டுமே.

பெண் சிங்கங்கள் ஓரளவு புதர்களிலும் பாறைகளிலும் மறைந்து தப்பித்துக் கொள்ளும். ஆண் சிங்கங்கள் பெண் சிங்கங்களை காப்பதற்காக போராடி இறந்து விடுவதும் உண்டு. இதனால் சிங்கத்தின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது. ஆபிரிக்கா மற்றும் இந்தியாவின் காடுகளில் மட்டுமே சிங்கங்கள் காணப்படுவதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. சிங்கங்களின் வாழ்நாள் பொதுவாக பத்திலிருந்து பதினான்கு ஆண்டுகள் வரை இருக்கும்.

## தவளை



தவளையாரே! தவளையாரே!
எங்கே போகிறீர்?
தத்தி தத்தி
கிணற்றுப் பக்கம் நடந்து போகிறேன்
நீண்ட நேரம்
எதுக்காக சத்தம் போடுறீர்?
இரவில் மழை பெய்யுமென்று
சேதி சொல்லுறேன்.

சுடோக்கு எண் 15 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 9 | | | 7 |
| 4 | 7 | | | 1 | 3 | | | 6 |
| 5 | | | | | | 4 | | |
| | 9 | | | | | | 3 | 4 |
| | 2 | 6 | | | | 1 | 9 | |
| 3 | 5 | | | | | | 7 | |
| | | 1 | | | | | | 8 |
| 9 | | | 3 | 5 | | | 6 | 1 |
| 8 | | | 1 | | 7 | | | |

சுடோக்கு எண் 16

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 4 | 1 | 9 | 7 | 5 | 8 | 6 |
| 6 | 8 | 7 | 2 | 3 | 5 | 1 | 4 | 9 |
| 5 | 1 | 9 | 6 | 4 | 8 | 2 | 7 | 3 |
| 8 | 7 | 2 | 9 | 1 | 6 | 3 | 5 | 4 |
| 1 | 6 | 3 | 8 | 5 | 4 | 7 | 9 | 2 |
| 4 | 9 | 5 | 7 | 2 | 3 | 6 | 1 | 8 |
| 9 | 2 | 8 | 5 | 6 | 1 | 4 | 3 | 7 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 | 6 | 5 |
| 3 | 5 | 6 | 4 | 7 | 9 | 8 | 2 | 1 |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சுந்தரர் குருபூசை

மருதனார்மடம்

சுன்னாகம் மேற்கு பருத்திக் கலட்டி ஞானவைரவர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை யொட்டி இன்று (26 ஆம் திகதி) முதல் ஒருவாரகாலம் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தினமும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் முற்றோதல் நடைபெற்று விசேட பூசை, சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் என்பன இடம்பெறும். கதாப்பிரசங்கத்தை சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ. கந்த சத்தியதாசன் நிகழ்த்துவார்.

திருமுறை படிப்பில் ஆர்வமுளளவர்கள் இதில் பங்குபற்றி திருமுறை ஓதலாம் என ஆலய பிரதமகுரு தெரிவித்துள்ளார்.

# கௌரவிப்பு

மருதனார்மடம்

பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதி, ஸ்ரீகன்னிகா மனோன்மணி அம்மன் ஆலய மண்டலாபிஷேக நிறைவு வைபவம் அண்மையில் நடைபெற்றது. அன்றைய தினம் சங்காபிஷேகத்தினைத் தொடர்ந்து சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தர்சன் குருக்களுக்கு ஆலய வழிபடுவோர் சபையின் சார்பாக அதன் செயலாளர் விநாயகர் மகேந்திரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வின்போது மண்டலாபிஷேக காலத்தில் தொடர் சொற்பொழிவாற்றிய சைவசித்தாந்த கலாநிதி செ. கந்த சத்தியதாசனுக்கு ஆலய வழிபடுவோர் சபைத் தலைவர் சி. சிவலிங்கம் பாராட்டுரை வழங்கியதுடன், பிரதமகுரு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து வழிபடுவோர் சபை செயலாளரின் தன்னலம் கருதா சேவையைப் பாராட்டி பிரதம குரு அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். சபையின் உப தலைவர் ச. செல்வரட்ணம் பாராட்டுரையும் நன்றியுரையும் வழங்கினார்கள். (01)

# தேசிய மரபுரிமைகள் அமைச்சருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் அவசர வேண்டுகோள்

"வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தொன்மையான இடங்களை உலக மரபுரிமை பகுதிகளாக இணைக்கும் வகையில் தேசிய மரபுரிமைச் சட்டமொன்றை கொண்டு வருவதற்கு தேசிய மரபுரிமைகள் அமைச்சு, அமைச்சரவைக்கு விதந்துரை செய்திருப்பதாக அறிகிறோம். இது சம்பந்தமாக சந்தித்துக் கதைப்பதற்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்தித் தருமாறு தேசிய மரபுரிமைகள் அமைச்சரை அவசரக் கடிதம் மூலமாகக் கேட்டிருக்கிறோம். அமைச்சருடனான சந்திப்பில் இந்த விதந்துரை பற்றி மேலும் விபரங்களைப் பெற்று மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாமன்றம் காத்திருக்கிறது." என்று அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற பழம்பெரும் திருத்தலங்களை புனித நகரத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு காலத்திற்குக் காலம் எடுக்கப்பட்ட முயற்சிகளை இந்து மாமன்றம் எதிர்த்து வந்திருக்கிறது. லக்ஸ்மன் ஜெயக்கொடி சமய விவகார கலாசார அமைச்சராக இருந்த போது தமிழ்நாட்டு இந்து ஆலய நிர்வாகச் சட்டம் போன்று இலங்கையிலும் இந்து ஆலயங்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் வகையில் சட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்தார். இதனை இந்து மக்கள் எதிர்ப்பதாகவும், இந்து ஆலயங்களில் அரசின் தலையீடு ஏற்படக் கூடாது என்றும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும், பொதுச் செயலாளரும் அமைச்சரை சந்தித்து எடுத்து விளக்கியதன் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இப்போது கொண்டுவரப்படவிருக்கும் சட்டம் தொடர்பான ஏற்பாடுகள் பற்றி அறிந்துகொண்ட இந்து மாமன்றத்தில் அங்கம் வகிக்கும் திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்களின் நிர்வாக சபை மற்றும் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த இந்து மாமன்ற அங்கத்துவ சங்கங்கள் என்பன இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி இந்து மாமன்றத்திடம் கேட்டுக் கொண்டிருப்பதையும், அமைச்சரின் கவனத்திற்கு மாமன்றம் கொண்டுவந்துள்ளது.

இது விடயம் தொடர்பாக இந்து மாமன்றம் ஆலய நிர்வாகங்கள், இந்து நிறுவனங்கள், சமய ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரையும் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதுபற்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும் இந்து மாமன்றம் தயங்கமாட்டாது."

அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# செல்வச்சந்நிதி உற்சவம்

பருத்தித்துறை

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

21ஆம் திகதி காலைத் திருவிழா ஆரம்பமாகும். ஆகஸ்ட் 26ம் திகதி பூங்காவனத் திருவிழாவும், 27ஆம் திகதி கைலாய வாகனத் திருவிழாவும், 28ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் நடைபெற விருக்கிறது. ஆகஸ்ட் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 31ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# நல்லைக் கந்தன் மகோற்சவம் இன்று மூன்றாம் நாள்



*நல்லூர் சிந்தையர் நற்றவ வாழ்வினர்*
*பல்லுயிர் கொள்கையர் பாத்துணும் பண்பினர்*
*எல்லையில் அன்பினர் என்றுமே கந்தனை*
*சொல்லியே வாழ்பவர் தூயநல் லூரதே!*

*- பண்டிதர் சி.கார்த்திகேசு*

**நயந்து நம்பால் வரக்கூவாய்!**



*கல்லுங் கனியக் கூவியுளம்*
*களிக்கும் குயிலே கற்றுணர்ந்தோர்*
*சொல்லும் பொருளுங் கடந்தானைத்*
*தூய ஞானச் சுடர்விளக்கை*
*அல்லும் பகலும் அடியார்கள்*
*அழுதும் தொழுதும் அருள்வேண்டும்*
*நல்லூர்க் கந்தப் பெருமானை*
*நயந்து நம்பால் வரக்கூவாய்!*

*- வித்துவான் க.வேந்தனார்.*

## சரவணத்து தாமரையில் பூத்தாய்



*தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்*
*தரணிக்கோர் இறையாகிக் கந்தா நின்றாய்*
*உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்*
*ஓங்காரப் பொருளனைத்தும் உளத்தில் கொண்டாய்*
*அமிழ்தமெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்*
*அழகுக்கு அழகாக முருகனென அவதரித்தாய்*
*தமை நாடும் எளியவர்களுக்கு தாயாய் வந்தாய்*
*சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்!*

*- மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்.*

# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

### நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று கவிமணி அன்னைதாசன் 'சைவமும் விஞ்ஞானமும்' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது யாழ்ப்பாணம் காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் கோண்டாவில் தில்லையம்பதி அறநெறிப் பாடசாலை மற்றும் கோண்டாவில் தில்லையம்பதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

* * * * * * * *

### நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சி இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் செல்வி எஸ்.சுகன்யா வழங்கும் இன்னிசை இடம்பெறுகின்றது. ஏ.ஜெயராமன் (வயலின்), எஸ்.துரைராசா (மிருதங்கம்), ஏ.செல்வரத்தினம் (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (கஙு)

* * * * * * * *

### நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில்

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் தெய்வீகப் பேருரை தொடரில் இன்று இளம் சைவப்புலவர் சறோஜினி சிவஞானம் "திருவாசகத் தேன்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி எம்.பி.அருளானந்தன் தலைமையில் இடம்பெறும்.

# தென்கிழக்காசியாவில் இந்துசமயம்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்து சமயம் பல நூற்றாண்டுகளுக்கு முன் பரவியது.

சிவ வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது தொல்பொருள் ஆராய்ச்சிகள் வாயிலாக மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய வெளி நாகரீகங்களில் காணலாம். இந்திய நாட்டிற்கு அப்பாலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இருந்திருக்கிறது.

தமிழர்தம் பண்பாட்டில் மதம் இயற்கையாக இடம் பெற்றுள்ளது. நாகரீகத்தின் தொடக்க காலங்களில் மானுடச் சமூகத்தின் வளர்ச்சியில் மதம் ஆற்றல் மிக்க பங்களிப்பை நிகழ்த்தியிருக்கிறது. உண்மையில் தென்கிழக்கு ஆசிய மக்கள் முதலில் இந்து சமயத்தைத்தான் தழுவினர். அதனால்தான் அவர்களின் பழக்கவழக்கங்களிலும் பண்பாடுகளிலும் மொழிகளிலும் இந்து சமயத்தின் தாக்கம் இன்றும் உணரப்பட்டு வருகிறது.

பண்டைய இந்திய வணிகர்கள் தற்போதைய தென்கிழக்கு ஆசியப் பகுதியைச் சொர்ண பூமி என்று அழைத்தனர். பழங்கால சீன வணிகர்களில் பலர் இந்து சமயம் இந்த வட்டாரத்தில் பரவி இருந்ததை வரலாற்று குறிப்புகளாக எழுதி வைத்துள்ளனர். கம்போடியாவிலும் ஜாவாவிலும் இந்து சமயம் செழித்து வளர்ந்திருந்ததை கபாசியன் போன்ற சீன யாத்திரீகர்கள் தங்களது குறிப்புகளில் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தென்கிழக்காசியாவில் இந்து சமயம் பரவுவதற்குச் சோழர்களும் ஒரு காரணமாக இருந்துள்ளனர். பத்தாம் நூற்றாண்டு வாக்கில் இராஜராஜசோழன் தலைமையிலான படையெடுப்பு துவங்கியது. ராஜராஜசோழனின் புதல்வர் இராஜேந்திர சோழன் மலாயாவை ஆட்சி புரிந்து விஜய பேரரசைக் கைப்பற்றினான். அவனின் வீரதீர சாகசங்கள் 1030-31 ஆண்டுகளில் இட்ட தஞ்சாவூர் கல்வெட்டுகளிலும் திருவாலங்காடு செப்பேடுகளிலும் காணப்படுகின்றன. இதன் காரணமாக அவனுக்குக் "கடாரம் கண்ட சோழன்" என்ற பெயரும் வழங்கத் தொடங்கியது.

மலாயாவில் ஸ்ரீவிஜயா மலாயா மன்னர்களை வீழ்த்தி அண்டை தீவுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. ஸ்ரீவிஜயா ஆட்சியின் தாக்கத்தை மலாய் மொழியிலும் கலாசாரத்திலும் காண முடியும். மலேசியாவின் கெடா மாநிலத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பழங்கால சிவன் கோவில்கள் அதற்குக் கட்டியம் கூறுகின்றன. சிங்கப்பூரின் அண்டை நாடுகளுடன் பழங்காலந்தொட்டே இந்துக் கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. கி.பி.நான்காவது நூற்றாண்டு முதல் இந்து சாம்ராஜ்யமாக ஜாவா, சுமத்ரா, போர்னியோ, சிங்கப்பூர், மலாயா ஆகியவை இருந்ததாகச் சீன நாட்டுப் பயணி இட்சிங் எழுத்தியுள்ள குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

சிங்கப்பூரில் 14வது நூற்றாண்டில் வந்த சீன வர்த்தகர் வாங் தா யுவான், சிங்கப்பூரின் துறைமுகத்தையும் வணிகம் பற்றியும் எழுதியிருப்பதுடன், இந்து கோயில் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தாய்லாந்து, பர்மா, கம்போடியா, இந்தோனிசியா, மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள கோவில்கள் தமிழர்களின் சமய, கலாசாரத் தொன்மைச் சிறப்புகளுக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. இந்து சமயத்தின் வளர்ச்சிக்குச் சைவமும் வைணவமும் சேர்ந்தே பங்காற்றியுள்ளன.

# உலக பார்வை

## சிரியாவில் இடைக்கால அரசை ஏற்கத் தயார்: போராட்டக் குழு



சிரியாவில் புதிய தலைமையின் கீழ் இடைக்கால அரசை ஏற்கத் தயார் என போராட்டக்காரர்களின் அணியான சிரியா தேசிய கவுன்சில் தெரிவித்துள்ளது.

இது குறித்து தேசிய கவுன்சிலின் செய்தி தொடர்பாளர் ஜார்ஜ் ஸப்ரா கூறுகையில், தற்போதைய ஜனாதிபதி அசாத்தின் ஆட்சியில் இடம்பெற்றுள்ள மற்றொரு நபரின் தலைமையில் இடைக்கால அரசு ஏற்பட்டால் அதை ஏற்கத் தயார். அதன் பின் அசாத் நாட்டை விட்டு பத்திரமாக வெளியேற நாங்கள் சம்மதிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், சிரியாவில் தற்போது ஏற்பட்டு வரும் உயிரிழப்புகளை உடனடியாக நிறுத்த வேண்டியுள்ளது. பொதுமக்களைக் காக்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி அசாதின் குற்றங்கள் மீதான விசாரணையைவிட இதுதான் தற்போது முக்கியமான விஷயம்.

ஏமனில் நடந்த ஆட்சி மாற்றம் போல, சிரியாவில் அனைத்து அதிகாரங்களும் புதிய தலைமையின் கீழ் மாற்றப்பட வேண்டும் என்றார்.

சிரியாவின் தலைமை உடனடியாக விலக வேண்டும் என்பது தான் தற்போது பரவலாக நிலவி வரும் கருத்து என்று கத்தார் பிரதமர் ஷேக் ஹமாத் பின் காலிஃபா அல்தானி மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

அசாத் பதவி விலகி, ஓர் இடைக்கால அரசு உருவாக வேண்டும் என அரபு லீக் கருத்து ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஸ்பெயின்: ஜேர்மன் நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தை



ஸ்பெயின் நாட்டின் நிதிப் பற்றாக்குறையை பூர்த்தி செய்வது குறித்து, ஜேர்மன் நிதியமைச்சர், ஸ்பெயின் நாட்டு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் கிரீஸ், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் கடும் பொருளாதார நெருக்கடி யில் சிக்கியுள்ளன.

யூரோ நாணயத்தை பயன்படுத்தும் இந்த நாடுகளை பொருளாதார சிக்கலில் இருந்து மீட்க, உலக வங்கியும், ஐரோப்பிய வங்கியும், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் நாடுகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக கடுமையான சிக்கன நடவடிக்கைகளான மானியங்கள் ரத்து, சம்பள குறைப்பு, ஆட் குறைப்பு போன்ற அதிரடி நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஸ்பெயின் நாட்டு வங்கிகளில், போதுமான நிதி இல்லாததால் சில வங்கிகள் மூடப்பட்டுள்ளன.

ஸ்பெயின் நாட்டின் இந்த நெருக்கடியை சமாளிக்க 300 பில்லியன் யூரோ தேவைப்படுகிறது.

இதனையடுத்து பொருளாதார மீட்பு நிதியை ஸ்பெயினுக்கு வழங்குவது குறித்து, ஜேர்மன் நிதியமைச்சர் உல்பகேங்க், ஸ்பெயின் நிதியமைச்சர் லூயிஸ் டி குயின்டோசை நேற்று சந்தித்து பேசினார்.

ஸ்பெயின் நாடு கடந்த 10 ஆண்டுகளில் வாங்கியுள்ள கடனுக்கான வட்டி 7.59 சதவீதம் அதிகரித்துள்ளது. மேட்ரிட் நகர பங்கு சந்தை 5 சதவீதம் குறைந்துள்ளது.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாவதால் உலக வங்கி, ஐரோப்பிய வங்கி உள்ளிட்டவை விதிக்கும் நிர்பந்தத்தை ஏற்று பொருளாதார மீட்பு நிதியை பெற ஸ்பெயின் முன்வந்துள்ளது.

## தீவிரவாதிகளை ஒழிப்பதில் வெற்றி: பெருமிதம் கொள்ளும் ஒபாமா



அல்கொய்தா தீவிரவாத இயக்கம், தோல்வியை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ரெனோ நவாடாவில் நடைபெற்ற வெளிவிவகாரக் கொள்கை குறித்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய ஜனாதிபதி ஒபாமா கூறுகையில், 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னரே நான் கூறியிருந்தேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்றால், அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு காரணமானவர்களை பழிவாங்குவேன் என்று.

அதேபோல் அத்தாக்குதலுக்கு காரணமான அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

அமெரிக்க மக்கள் பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே, எனது முழு முதற் விருப்பம்.

தீவிரவாதத்தை எந்த ரூபத்திலும் அமெரிக்கா அனுமதிக்காது. அதே போன்று தீவிரவாதிகள் எங்கிருந்தாலும் அவர்களை தேடி அமெரிக்கா அழிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## தொண்டை புற்றுநோயால் கானா நாட்டின் ஜனாதிபதி மரணம்

### புதிய ஜனாதிபதி தெரிவு



மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவின் ஜனாதிபதி அட்டா மில்ஸ (வயது 68) தொண்டை புற்றுநோயால் நேற்று முன் தினம் காலமானார்.

கடந்த 2009ஆம் ஆண்டு கானா குடியரசு நாட்டின் ஜனாதிபதியாக அட்டா மில்ஸ் பதவியேற்றார்.

கடந்த இரு ஆண்டுகளாக தொண்டை புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த அட்டா, அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று கடந்த ஜூன் மாதம் நாடு திரும்பினார்.

அதன் பின்னர் கானா நாட்டின் தலைநகர் அக்ரா இராணுவ மருத்துவமனையில் பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த அட்டா, சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இதையடுத்து அந்நாட்டு அரசியல் சாசனத்தின்படி துணை ஜனாதிபதி ஜான் டிராமனி மஹாமா, இடைக்கால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

அந்நாட்டில் ஏற்கெனவே ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் வரும் டிசம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதில், தேசிய ஜனநாயக காங்கிரஸ் கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட ஜான் அட்டா மில்ஸ் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## ஓய்வூதியம் பெறுவதற்காக தந்தையின் சடலத்தை மறைத்து வைத்திருந்த நபர்

தந்தை இறந்ததை மறைத்து கடந்த ஏழு மாதங்களாக, அவருடைய ஓய்வூதியத்தை பெற்று வந்த மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனாவின் பீஜிங் நகரை சேர்ந்தவர் லீ. இவருடைய தந்தை கடந்த ஜனவரி மாதம் இறந்துள்ளார்.

ஆனால் லீ தன் தந்தை தன்னுடன் சண்டை போட்டுக் கொண்டு, வெளியே சென்று விட்டதாக பக்கத்து வீட்டாரிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே லீ வீட்டிருந்து துர்நாற்றத்துடன் தண்ணீர் வருவதாக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நகராட்சி நிர்வாகத்திடம் தெரிவித்தனர்.

உடனே அவர்கள் வந்து பார்த்த போது, லீயின் தந்தையின் உடல் அழுகிய நிலையில் தண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

தந்தையின் ஓய்வூதியத்தை பெறுவதற்காக, அவரது இறப்பை தெரிவிக்காமல் மறைத்து வைத்து, முறைகேடாக ஓய்வூதியத்தை பெற்ற லீ கைது செய்யப்பட்டுள்ளார்.

## இந்தோனேஷியாவில் கடும் நிலநடுக்கம்




இந்தோனேஷியாவில் நேற்று இரு இடங்களில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இருப்பினும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.

இந்தோனேஷியாவின் தென் மேற்கே 150 கி.மீ. தொலைவில் உள்ள சிம்யூலு தீவில் கடலுக்கு அடியில் 45 அடி ஆழத்தில் ஏற்பட்ட இந்நில நடுக்கம், ரிக்டர் அளவு கோலில் 6.6 ஆக பதிவானது.

இந் நில நடுக்கத்தால் சிம்யூலு தீவை சுற்றியுள்ள பகுதிகளில் கட்டிட ங்கள் லேசாக குலுங்கின என்றும் ஆனால் உயிர் சேதம், பொருட்சேதம் ஏற்படவில்லை என அவுஸ்திரேலியா வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதே போன்று தென்மேற்கு சுமத்ராவிலுள்ள மேற்கு கடற்கரையின் மடோன் தீவுப பகுதியிலும் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டது.



கானா அதிபர் மரணமடைந்ததை அடுத்து, அந்நாட்டின் துணை அதிபர் ஜான் மகாமா(நடுவில்) அக்ராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

## இலஞ்சம் பெற்ற அண்ணனுக்காக மன்னிப்பு கோரிய தென்கொரிய ஜனாதிபதி



தென் கொரியாவின் ஜனாதிபதி லீ மியூங்-பாக்கின் மூத்த சகோதரர் லீ சாங் டியூக்கும், அவரது உதவியாளர்களும் இரண்டு சேமிப்பு வங்கிகளுக்கு தணிக்கையாளர் வராமலிருக்க 600 மில்லியன் வான் (525,000 டொலர்) இலஞ்சமாகப் பெற்றனர்.

இதனையடுத்து ஜனாதிபதியின் மூத்த சகோதரரரை இந்த மாதத் தொடக்கத்தில் பொலிசார் கைது செய்தனர். இவரது இந்த நடவடிக்கை அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிரொலிக்கும் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தனது மூத்த சகோதரர் லீ சாங்கின் இந்த இழிவான செயலுக்கு தென் கொரிய ஜனாதிபதி லீ மியூங், தனது நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரினார்.

இந்த வங்கி ஊழலால் வெறுத்துப் போன நலிந்த இருபது வங்கிகள் மூடப்பட்டு விட்டது. இவை சேமிப்பு வங்கிகள் என்று அழைக்கப்பட்டாலும் கடந்த 1997 ஆசியாவில் நிதி நெருக்கடி ஏற்பட்டபோது தோன்றியவைதான்.

இதுபோன்ற வங்கிகளில் சுமார் நூறு வங்கிகளை சிறிய அளவில் வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களே நடத்தி வருகின்றனர். வங்கி ஊழல் குறித்த விசாரணை யில் அரசியல்வாதிகள், இடைத்தரகர், வங்கியாளர் உட்பட இருநூறு பேர் மீது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

மேலும், வங்கிகளில் இருப்பு இல்லாததால் சாலமோன், மிராயே என்ற இரு சேமிப்பு வங்கிகள் இரண்டு மாதங்களுக்கு முன்பு மூடப்பட்டன. இந்த வங்கி பிரச்சினையிலும் ஜனாதிபதியின் சகோதரர் லீ சாங்கின் பங்குள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்காக குரல் கொடுப்போர் நாமே

## மு.க.ஸ்டாலின் முழக்கம்

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் ஒரே கட்சி தி.மு.கதான் என்று அக்கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சியினர் திமுகவில் இணையும் நிகழ்ச்சி வானகரத்தில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நேற்று நடைபெற்ற போது தே.மு.திக. ம.தி.மு.க, பா.ம.க உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தைப் பொருத்தவரை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சி மாற்றம் நடைபெறு



கிறது.

கடந்த 2006ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க ஆட்சியைப் பிடித்திருந்தபோது, நாங்கள் வாக்களித்தவற்றையெல்லாம் நிறைவேற் றினோம்.

ஆனால் தமிழகத்தில் இப்போது ஒழுங்கான ஆட்சி நடைபெறுகிறதா என்பது மிகவும் சந்தேகமாக இருக்கிறது.

பல்வேறு கட்சிகளிலிருந்து 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தி.மு.க.வில் சேர்ந்துள்ளனர் என்பது எங்கள் கட்சிக்குக் கிடைத்த வெற்றியை காட்டுகிறது.

தி.மு.க.வினர் தொடர்ந்து கைது செய்யப்படுவதைக் கண்டித்து சிறை நிரப்பும் போராட்டம் நடைபெற்றது. இதில் இளைஞர்கள் அதிகமானோர் பங்கேற்றனர். சிறையில் போதுமான இடம் இல்லாததால் தி.மு.கவினர் விடுவிக்கப்பட்டனர்.

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஒரே கட்சி தி.மு.க.தான் என்றார். சட்டப் பேரவையில் தே.மு.தி.க எதிர்க் கட்சியாக இருந்தாலும் மக்கள் மத்தியில் தி.மு.க.தான் எதிர்க் கட்சியாக இருக்கிறது எனவும் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# இந்திய செய்திகள்

# இளம் பெண்ணை ஓடும் ரயிலில் கற்பழிக்க முயற்சி

## குற்றவாளிகளுக்கு பொலிஸார் வலை வீச்சு



கர்நாடகா மாநிலம், பெங்களூரில் இளம் பெண்ணொருவரை ஓடும் இரயிலில் வைத்து கற்பழிக்க முயன்ற 4 வாலிபர்களில் 2 பேர் பிடிப்பட்டனர். இன்னும் 2 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

19 வயதுள்ள இப்பெண், பெங்களூரில் தனியார் நிறுவனமொன்றில் வேலைப் பார்த்து வருகின்றார். நேற்று மாலை தனது பணியை முடித்துக்கொண்டு இரயில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்போது இம்ரான், அக்பர், சுபா, அகமது என்ற நான்கு வாலிபர்கள் இப்பெண்ணிடம் சில்மிஷம் செய்தனர்.

இந்த சில்மிஷத்தால் கோபமான அப்பெண் சத்தமிட்டார். இதைத்தொடர்ந்து பலவந்தமாக அப்பெண்ணை கற்பழிக்க முயன்றனர். இதற்கு அவர் ஒத்துழைக்க மறுக்கவே அவரை ஓடும் இரயிலிருந்து தள்ளி விட்டனர்.

இச்சம்பவத்தை பார்த்த மற்ற பயணிகள் அப்பெண்ணை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். தலையிலும் முதுகிலும் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

குற்றவாளிகளில் இரண்டு பேர் பிடிப்பட்டுள்ளதாகவும் இன்னும் இரண்டு பேரை பொலிஸார் தேடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.


ஏற்கனவே அசாம் மாநிலம் கவுகாத்தியில் இளம் பெண்ணொருவரை 20இற்கும் மேற்பட்ட கும்பல் மானபங்கம் படுத்திய சம்பவம் இன்னும் நாட்டில் நீங்காத சோகமாக உள்ளது. இந்நிலையில் இந்தச் சம்பவம் நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அசாமில் கலவரம்: துப்பாக்கிச் சூட்டிற்கு உத்தரவு

அசாம் மாநிலம் கோக்ரஜார் பகுதியில் சிறுவனொருவன் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெடித்த கலவரத்தில் இதுவரை 32 பேர் பலியாகியுள்ளனர்.

போடா பழங்குடியினருக்கும் சிறுபான்மை இனத்தவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள இக்கலவரம், அசாமின் மேற்குபகுதி முழுவதும் பரவியுள்ளதில் 500-இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வன்முறைக்களமாக மாறியுள்ளன.

கலவரம் பாதித்த பகுதிகளில் வசிக்கும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு நிலவும் பதட்டமான சூழலின் காரணமாக வடகிழக்கு மாநிலங்களுக்கான 40 இரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. 31 இரயில்கள் பாதி வழியில்



ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் உள்ள சுமார் 30 ஆயிரம் பயணிகளுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட வசதிகள் இரயில்வே சார்பில் செய்து தரப்படுகின்றன.

இது குறித்து அசாம் முதல்வர் தருண் கோகாயைத் தொடர்பு கொண்ட பிரதமர் மன்மோகன்சிங், நிலைமையின் தீவிரத்தை கேட்டறிந்ததோடு, கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய உறுதியளித்தார்.

நாட்டின் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆகியோரும் மாநில முதல்வர் தருண் கோகாயுடன் நிலைமை குறித்து கேட்டறிந்தனர்.

**துப்பாக்கி சூட்டிற்கு உத்தரவு:** இன்னும் 5 நாட்களுக்குள் நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் வரும் என்று அசாம் காவல்துறை தெரிவித்துள்ளது. கலவரத்தை ஒடுக்க வன்முறையில் ஈடுபடுவோரை கண்டவுடன் சுட உத்தரவிடப்பட்டுள்ளது.





அசாம் மாநிலம் கோக்ராஜ்கர் மாவட்டத்தில், இரு பிரிவினருக்கிடையே நடந்த கலவரத்தால் திமோல் கிராம மக்கள் தங்களது கிராமத்தை விட்டு வெளியேறுகின்றனர்.

# இலவச அரிசியில் பூச்சி, வண்டுகள்: சட்டசபையில் ஆதாரத்துடன் நிரூபித்த அ.தி.மு.க உறுப்பினர்

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் இலவச அரிசி தரமற்றதாகவும், பூச்சி, வண்டுகளுடன் உள்ளதாகவும் அ.தி.மு.க. உறுப்பினர் அன்பழகன் ஆதாரத்துடன் சட்டசபையில் புகார் தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுச்சேரி சட்டசபையில் பூஜ்ய நேரத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் அன்பழகன் பேசியதாவது. இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்காக மட்டும் அரசு ரூ.90 கோடியை பட்ஜெட்டில் ஒதுக்குகிறது.

ஆனால் இந்த அரிசி 3 அல்லது 4 மாதத்திற்கு ஒரு முறை



தான் வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அரிசியும் சமைப்பதற்கு தகுதியற்றதாக உள்ளது.

மேலும் அரிசி துர்நாற்றத்துடன், பூச்சி, வண்டுகள் நிறைந்து காணப்படுகிறது. மக்கள் இந்த அரிசியை வாங்கி வீதியில் கொட்டுகின்றனர். ஏழை மக்களுக்கு தரமான அரிசியை வழங்க வேண்டியது அரசின் கடமை என்று தெரிவித்தார்.

இந்நிலையில் தான் கொண்டு வந்த அரிசியை சபாநாயகரிடம் காட்டினார். இதனையடுத்து அதிகாரியை அனுப்பி விசாரணை நடத்தும்படி முதலமைச்சருக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

# வீதிகளிலுள்ள குப்பையை அகற்றுங்கள் விஜயகாந்த் அதிரடி உத்தரவு

தமது பிறந்தநாளை முன்னிட்டு சாலைகளை பராமரிப்பதுடன், சாலை தடுப்புகளுக்கு வர்ணம் பூச வேண்டும் என்று கப்டன் விஜயகாந்த், கட்சி நிர்வாகிகளுக்கு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி, தனது 60வது பிறந்தநாளை கொண்டாடுகிறார் தேமுதிக தலைவர் விஜயகாந்த்.



இதனையொட்டி பிறந்த நாளன்று திருக்கடையூர் அபிராமி அம்மன் கோவிலில் சிறப்பு விழாவை நடத்துகிறார். அத்துடன் நலத்திட்ட உதவிகளை ஒரு மாத காலம் வழங்கவும் உத்தரவிட்டிருக்கிறார்.

இது மட்டுமல்லாமல் சாலைகளை சீரமைக்க வேண்டும், சாலைகளின் தடுப்பு சுவருக்கு வர்ணம் பூச வேண்டும் போன்ற அதிரடி உத்தரவுகளையும் கட்சி நிர்வாகிகளுக்கு பிறப்பித்துள்ளார். இதனால் நிர்வாகிகள் கதிகலங்கி போயுள்ளனராம்.

# பிரதமரை தவறாக வழி நடத்தினார் ராசா




இந்தியாவின் இமாலய முறைகேடான 2ஜி அலைக்கற்றை விவகாரத்தில் முன்னாள் மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா, பிரதமர் மன்மோகன் சிங்கை தவறாக வழி நடத்தி விட்டார் என நாடாளுமன்ற கூட்டுக் குழுவிடம் சி.பி.ஐ புகார் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கூட்டுக் குழுவிடம் சிபிஐ அதிகாரிகள் கூறியதாவது, 2ஜி அலைக்கற்றை உரிமங்களை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் விடயத்தில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஆ.ராசா தொடர்ந்து தவறான விபரங்களைத் தந்து அவரை தவறாக வழி நடத்தினார்.

2ஜி உரிமங்களின் விலை நிர்ணயத்திலோ அல்லது ஒதுக்கீட்டிலோ மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லை. மேலும் தயாநிதி மாறன் தொடர்புடைய ஏர்செல்-மெக்சிஸ் ஒப்பந்த விவகாரத்திலும் ப.சிதம்பரத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

2ஜி விவகாரத்தில் தொடர்புடைய எந்த தொலைத் தொடர்பு நிறுவனமும் அன்னிய செலாவணி முறைகேடு எதிலும் ஈடுபடவில்லை.

அதே நேரத்தில் மொரிஷியஸில் உள்ள டெல்பி இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்துக்கு ரிலையன்ஸ் டெலிகாம் நிறுவனம் தனது பங்குகளை ஒதுக்கீடு செய்தது குறித்து விசாரணை தொடர்ந்து வருகிறது என்றும், 2ஜி உரிமங்கள் ஒதுக்கப்பட்ட அதே காலகட்டத்தில் ஓசிஸ் ஆப்- மேன் தீவுகளில் யூனிடெக் நிறுவனம் 51 மில்லியன் டொலரை முதலீடு செய்தது குறித்தும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் சிபிஐ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இது 2ஜி உரிமங்களுக்காக தரப்பட்ட லஞ்சமாக இருக்கலாம் என சிபிஐ கருதுவது குறிப்பிடத்தக்கது. 2ஜி முறைகேடு நடந்து 14 மாதம் கழிந்தே நடவடிக்கையில் இறங்கியது ஏன் என்று சில நாடாளுமன்ற கூட்டுக் குழு உறுப்பினர்கள் சிபிஐ அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினர்.

இந்த விவகாரத்தில் மத்திய கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை வெளியான பிறகே இவ்வளவு பெரிய மோசடி நடந்தது தெரியவந்தது என்று சி.பி.ஐ. அதிகாரிகள் பதிலளித்தனர்.

# ஒலிம்பிக் தொடக்க விழா கசிந்த சில இரகசியங்கள்



ஒலிம்பிக் போட்டி தொடக்க விழா, நாளை கோலாகலமாக நடைபெற உள்ளது. இதற்கான ஒத்திகை நிகழ்ச்சி திங்கட் கிழமை இரவு நடந்தது. தொடக்க விழா நிகழ்ச்சியை உலகம் முழுவதும் 100 கோடி பேர் வரை பார்ப்பார்கள் என்று நம்பப்படுவதால், ஒத்திகை நிகழ்ச்சியில் பார்த்தவற்றை வெளியே சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில், போட்டியை நடத்தும் நாடுகள், தங்கள் நாட்டின் பெருமை, கலாசாரம், பாரம்பரியம் உள்ளிட்டவற்றை விளக்கும் வகையில், பிரமாண்டமான கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது வழக்கம். இதனால் தொடக்க விழா ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பை, ஸ்லம்டாக் மில்லினர் படத்தை இயக்கியவரான ஹொலிவுட் இயக்குநர் டேன்னி பொயில-டம் இங்கிலாந்து ஒப்படைததது.

27 மில்லியன் யூரோ செலவில் இதற்கான ஏற்பாடுகளை மிக பிரமாண்டமாக செய்துள்ளார் டேன்னி பொயில். நிகழ்ச்சி முடிந்த அடுத்த சில நிமிடங்களில் இதை டிஜிற்றல் படமாக தொகுத்து வெளியிடவும் அவர் திட்டமிட்டுள்ளார். இந்நிலையில், தொடக்க விழா ஒத்திகை நிகழ்ச்சி, ஸ்ட்ராப்போர்டில் உள்ள ஒலிம்பிக் அரங்கில் நடந்தது.

இதில், முக்கியமான 60,000 பேருக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின் தொடக்கத்திலேயே அரங்கில் தோன்றிய இயக்குநர் டேன்னி பாயில், தொடக்க விழா நிகழ்ச்சிகளின் ரகசியத்தை வெளியே சொல்லாமல் காக்க வேண்டும் என்றும் அப்போதுதான் அதன் சுவாரசியம் குறையாமல் இருக்கும் என்றும் கோரிக்கை வைத்த பின்னர், நிகழ்ச்சிகள் தொடங்கின. பத்திரிகையாளர்களும் இந்த நிகழ்ச்சியில் சாதுரியமாக தடுக்கப்பட்டனர். ஆனால், பார்வையாளர்கள் சிலர் டுவிட்டரில் தட்டியுள்ள சில ரகசியங்கள்:

* தொடக்க விழாவில் இங்கிலாந்தின் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

* நூற்றுக்கணக்கான விலங்குகள் நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட உள்ளன.

* அரங்கத்தில் செயற்கை மழைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* கிரிக்கெட் மைதானத்தை போன்ற செட், மைதானத்தில் அமைக்கப்படுகிறது. இப்படி ஏகப்பட்ட தகவல்கள் கிடைக்கின்றன.

# வென்றது யாழ்.இந்துவீழ்ந்தது சென்.ஜோன்ஸ் கல்லூரி

## 94 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ். இந்து

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினுடைய மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளிற்கிடையிலான மட்டுப்படுத்திய பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது.

இதில் போட்டியொன்றில் யாழ். இந்துக் கல்லூரி அணி முதலாம் சுற்றின் இரண்டாவது போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை எதிர்கொண்டது. நாணயற் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மயாழ். இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பாக ஜனவத்ஷர்மா 61 பந்துகளில் 69 ஓட்டங்களையும் துவாரகன் 62 ஓட்டங்களையும், பானுகோபன் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஹெலுமிலன் 2 விக்கெட்டுக்களையும் கிஷாந்துஜன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 254 ஓட்டங்களை வெற்றி இலக்கா நோக்கி துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்.இந்துக்கல்லூரி.

அணியின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாது தடுமாறி, 38.2 பந்துப் பரிமாற்றத்தின் நிறைவில் 159 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக பிளமிங் 43 ஓட்டங்களையும், சிவதர்ஷன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணியின் சிவலக்ஷன் 7.2 ஓவர்கள் வீசி 35 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வழுதி 6 ஓவர்கள் வீசி 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பானுகோபன் 6 ஓவர்கள் வீசி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார். இடம்பெற்ற 2 போட்டிகளிலும் வெற்றிபெற்றதன் மூலம் அடுத்த சுற்றிற்கு யாழ் இந்துக் கல்லூரி 15 வயதுப் பிரிவு தெரிவாகக் கூடிய சாத்தியம் உள்ளது.

# ஊசிதான் காரணமாம்!



விளையாட்டு வீராங்கனைகளுக்குப் போடப்படும் டெஸ்டோஸ்டெரோன் ஊசிதான், எனது உடல் ஆண் போன்ற தோற்றம் பெற காரணம் என்று தடகள வீராங்கனை பிங்கி பிரமாணிக் தெரிவித்துள்ளார்.

நானும் முதலில் பெண்களைப் போல இயல்பாகத்தான் இருநதேன்.

விளையாட்டு வீராங்கனைகளுக்குப் போடப்படும் டெஸ்டோஸ்டெரோன் என்ற அந்த ரஷ்ய மருந்தை போட்டுக் கொள்ள ஆரம்பித்த பிறகுதான் எனது குரல் மாறியது. சருமம் ஆண்களைப் போன்று காட்சி அளித்தது என்று தெரிவித்துள்ளார் பிங்கி.

# சமி மன ரீதியாக உறுதியற்றவர்: அக்தர்



பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் மொஹமட் சமி மனரீதியாக உறுதியற்ற வீரர் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர் தெரிவித்துள்ளார். மொஹமட் சமி மீதான விமர் சனங்கள் அதிகரித்துவரும் நிலையிலேயே அக்தர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

பாகிஸ்தான் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவெண்டி டுவெண்டி தொடருக்கான அணியில் மொஹமட் சமி சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவரின் உள்ளடக்கம் தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சொய்ப் அக்தர், மொஹமட் சமி மனரீதியாக தன்னம்பிக்கையற்ற ஒரு வீரர் எனவும், அழுத்தங்களைத் தாங்கும் இயல்பு அவருக்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார். அவரை மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளராக மாற்றுவதற்கு அதிக முயற்சிகள் செய்யப்பட்டதாகத் தெரிவித்த அக்தர், எனினும் அவை பலனளித்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

ராவல்பின்டி எக்ஸ்பிரஸ் என அக்தர் அழைக்கப்படும் நிலையில் மொஹட் சமியை கராச்சி எக்ஸ்பிரஸ் ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், பாகிஸ்தான் அணியில் சமிக்குப் போட்டியாக அக்தரே காணப்படுவதாக அவருக்கு ஊக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவித்த அக்தர், எனினும் அவரால் சிறப்பாக வேகப்பந்து வீச்சாளராக மிளிர முடியவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும் மொஹட் சமி பல நேரங்கள் துரதிர்ஷ்டமானவராகக் காணப்பட்டதை ஏற்றுக் கொண்ட அக்தர், பல வேளைகளில் அவரது பந்துவீச்சில் இலகுவான பிடிகள் தவறவிடப்பட்டதாகவும், சில நேரங்களில் சமிக்குச் சாதகமாக நடுவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்கா திரும்பினார் ஸ்மித்



தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் - தென்னாபிரிக்காவிற்குத் திரும்பியுள்ளார். தனது மனைவி, குழந்தையொன்றைப் பிரசவிக்கவுள்ள நிலையிலேயே அவர் தென்னாபிரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் 5ஆம் நாளன்று போட்டி ஆரம்பிக்கும் போது தென்னாபிரிக்காவிற்குச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளுடன் மைதானத்திற்குச் சென்ற ஸ்மித், போட்டி முடிவடைந்ததும் விமானநிலையத்திற்குச் சென்று தென்னாபிரிக்காவிற்குப் புறப்பட்டார்.

தனது முதல் குழந்தைக்காக அவர் தென்னாபிரிக்கா திரும்பியுள்ள நிலையில் முதலாவது போட்டிக்கும் இரண்டாவது போட்டிக்குமிடையில் இடம்பெறவுள்ள 2 நாள் பயிற்சிப் போட்டியில் ஸ்மித் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக ஸ்மித் இங்கிலாந்து திரும்பி 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான தயார்படுத்தல்களில் ஈடுபடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய கிரேம் ஸ்மித், அப்போட்டியில் சதமொன்றைப் பெற்றுக் கொடுத்து தென்னாபிரிக்க அணிக்கு சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தார். இரண்டாவது போட்டி ஹெடிங்லீயில் ஓகஸ்ட் 2ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட தடகளப் போட்டி முடிவுகள்

வலிகாமம்

கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில்

இடம்பெற்ற ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்**

என்.றிசாந்தன்( கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

இ.கருணாலோறன்ஸ் (பூநகரி உதவி அரசாங்க அதிபா பிரிவு)

பி.லூயிஸ் லக்ஸ்மன்(பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**200 மீற்றர் ஓட்டம்.**

என்.றிசாந்தன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

என் ரஜிந்தன் (பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

இ.கருணா லோறன்ஸ் (பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**400 மீற்றர் ஓட்டம்.**

என்.றிசாந்தன்( கரைச்சி உதவி அரசாங்க அதியர் பிரிவு)

இ.கருணாலோறன்ஸ் (பூநகரி உதவி அலசாங்க அதிபா பரிரிவு)

என் கோணேசன் (கரைச்சி உதவி அரசாஙக அதிபர் பிரிவு)

**800 மீற்றர் ஓட்டம்**

ஆா.ரதிசன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

வி.அஜந்தன பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

எஸ.சசிவன் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

**1500 மீற்றர் ஓட்டம்.**

ஆர்.ரதீசன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

எஸ்.பிரசாந் (பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

ஆர்.தவக்குமார (பளை உதவி இரசாங்க அதிபர் பிரிவு)

**5,000 மீற்றர் ஓட்டம்**

பி.நிமோஜ் வி.லோகரதன், ஆ.சபேஷ் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**10,000 மீற்றர் ஓட்டம்**

பி.நிமோஜ் வி .லோகரதன் பி.பிரியந்தன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**110 மீற்றர் தடை தாண்டல்**

எம்.பிரசாந்தன் எஸ்.கமல்ராஜ் ( கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**நீளம் பாய்தல்**

எம்.ரஜிந்தன் (பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

வீ.தயாளன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

என்.சந்திரகுமார் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**உயரம் பாய்தல்**

பி.பிரதிபன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

ஸெ.கமல்ராஜ் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பரிவு)

வி.தயாளன்(கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**முப்பாயச்சல்**

ஏஸ்.கமல்ராஜ் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

வி.தயாளன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

எம்.ரஜிந்தன் (பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**தட்டெறிதல்**

கே.சண்முகானந்தன் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

எஸ்.செல்வரஜிவன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு) கே.லக்கீரன் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**ஈட்டி எறிதல்**

ரி.நிதர்சன் (பூநகரி உதவி இரசாங்க அதிபர் பிரிவு)

கே.லக்கிரன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

எஸ.திணேஸ்குமார் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**குண்டு போடுதல்**

எஸ்.செல்வரஜீவன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு), எஸ.திணேஸ்குமார் (கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு), கே.லக்கீரன் (கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

**4X100 அஞ்சல் ஓட்டம்**

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பூநகரி அதவி அரசாங்க அதிபர் பிரிவு, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

**4X400 அஞ்சல் ஓட்டம்**

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பூநகரி உதவி அரசாங்க அதிபா பிரிவு.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 26.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது